7/2 R.R.O. NO. 46/66 P.x.
2

மேழிச்செல்வம்

விசுவாவசு ௵ மாசி மீ

விலை 25 காசு.

தஞ்சாவூர் தீவிர சாகுபடி திட்டப் பகுதிகளை அமெரிக்கத் தூதர் பார்வையிடல்

5—1—66 அன்று தஞ்சாவூர் தீவிர சாகுபடி திட்டப் பகுதிகளைப் பார்வையிட வருகை தந்த அமெரிக்கத் தூதர் திரு. செஸ்டர் பௌல்ஸ் அவர்கள் சாலியமங்கலம் கிராமத்தில் வரவேற்கப்படுகிறார்.



அமெரிக்கத் தூதர் திரு. செஸ்டர் பௌல்ஸ் ஆடுதுறை 27 நெல்வயலைப் பார்வையிடுகிறார்.

மேழிச்செல்வம் சந்தா தாரர்களுக்கு

நினைவூட்டுகிறோம்

1966-ம் ஆண்டு எப்ரல்-மே மாதம் (சித்திரை) இதுடன் முடிவாகும் "மேழிச்செல்வம்" சந்தாதாரர்களின் சந்தா எண் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

மாவட்டம்	சந்தா எண் முதல்	சந்தா எண் வரையுள்ள
செங்கல்பட்டு	3987	4037
தென் ஆற்காடு	7255	7463
வட ஆற்காடு	1185	1231
தஞ்சாவூர்	2146	2514
திருச்சி	8115	8246
சேலம்	9450	9576
மதுரை	4527	4588
கோயமுத்தூர்	6862	6939
இராமநாதபுரம்	3799	3892
திருநெல்வேலி	668	773
கன்னியாகுமரி	1992	2034
நீலகிரி	5199	5227
உள்ளூர் சந்தா	2503	2641

"மேழிச்செல்வம்" தொடர்ந்து பெற மேற்படி சந்தாதாரர்கள் வருட சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 30-ந் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5.

புதுப்பிக்கும்போது தவறுமல் மாவட்டத்தையும் சந்தா எண்ணையும் அதில் குறிப்பிடவும்.

முன்பு தலைமை அலுவலகத்தில் சந்தா செலுத்தியவர்கள் சந்தா எண்ணுடன் **உள்ளூர் சந்தா** என்று குறிப்பிடவும்.

புதிதாக சந்தா செலுத்த விரும்புவோர் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) அருகில் உள்ள விவசாய அலுவலகத்தில் செலுத்தி அல்லது மணியார்டர் மூலம் மேற்குறிப்பிட்ட முகவரியில் செலுத்தி சந்தாதாரராகப் பதிவு செய்துக் கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும்போது தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

ஆறு மாத சந்தா கிடையாது. தபால் தலைகள் எற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் எற்பட்டால், மாவட்டம், சந்தா எண் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

உள்ளுரை

	பக்கம்
தீவிர விவசாயப் பகுதி ஜில்லாக்களில் அவசரகால உணவு உற்பத்தி திட்டங்கள்	5
சீமைக் குதிரை மசால் கால்நடைத் தீவனத்திற்கும் வேலிக்கும் எற்ற பயிர்	7
காவேரி மேட்டூர் பாசன ஒருபோக நஞ்சை நிலத்தில் பசுந்தாள் உரப் பயிர் சாகுபடி	8
விவசாயச் செய்திக் கதிர் ..	10
தென்னை சாகுபடி ..	11
பவானி சாகர் பண்ணையில் புகையிலை நாற்றங்கால்	14
கேள்வியும் பதிலும் ..	16
டன்னேஜ் கிளப் ..	18
கரும்பின் தண்டு துளைக்கும் புழுக்களை ஒழிக்க பயிர் பாதுகாப்பு முறைகள்	20
வானொலிச் செய்திகள் ..	22
தென்னையின் முக்கிய விரோதிகளும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்	25
1965-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை	29

விளம்பரங்கள் :

மாபெரும் நாடு மாபெரும் மக்கள் ..	4
மெட்ரிக்முறை நீட்டலளவை ..	9
டாடாபைசன் ..	13
பொட்டாஷ் ..	21
ராஜா பண்ணைத் தோட்டம் ..	24

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

நம் பெண் இனத்தைப் பற்றி நாம் பெருமையடைகிறோம். நம் குடும்பத்தில் நமது அன்புக்கு மிகவும் உகந்த யாராவது ஒருவர் நம் எல்லைகளை காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கலாம். நாடு சிரம நிலையைக் கடக்க வேண்டிருக்கும். இத்தருணத்தில் பெண் மக்கள் முகமலர்ச்சியுடன் அதை ஏற்கின்றனர். சேதாரத்தைத் தவிர்த்து சேமிக்க வேண்டியதை அவர்கள் உணருகின்றனர். ஆஸ்பத்திரிகளிலும், ரத்த சேமிப்பு நிலையங்களிலும், தன்னிச்சை ஸ்தாபனங்களிலும் அவர்கள் பணிபுரிந்து சண்டையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றனர். நம் பெண்மணிகள் நாட்டிற்காக சேவை புரிகின்றனர். நாமும் நம் கடமையைச் செய்வோம்.

மாபெரும் நாடு மாபெரும் மக்கள்

DA 65/F9

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை

மலர் 23 | விசுவாவசு௵ மாசிமீ —1966 பிப்ரவரி-மார்ச் | இதழ் 2

* தீவிர விவசாயப் பகுதி ஜில்லாக்களில் அவசரகால உணவு உற்பத்தித் திட்டங்கள்

திரு டி. எஸ். பிரான்சிஸ், கூட்டு விவசாய நெறியாளர், சென்னை.

நமது நாட்டில் விவசாயமே பெருந்தொழிலாய் இருந்த போதிலும் இப்பொழுது போதிய அளவு உணவு உற்பத்தி செய்யப்படுவதில்லை. இன்று பற்றுக்குறை நீக்கும் வகையில் வெளி நாட்டை நம்பி இருக்கிறோம். இந்த நிலையை மாற்றுவதற்கு பல முயற்சிகளை, பல திட்டங்கள் மூலமாக மேற்கொண்டுள்ளோம். இத்திட்டங்களை சரிவர நிறைவேற்றி நாட்டில் தன்னிறைவை ஏற்படுத்தவும் நம் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றவும் வேண்டும். உணவின்றி உயிர் இல்லை. உணவு இல்லா நிலையில் பிறரை நம்பும் நிலை ஏற்படுகிறது. உணவு பெருக்கம் அதிகமாக உள்ள நாட்டை பிற நாடுகள் நாடி இருக்கும் என்பதை விளக்கும் வகையில் :—

" பலகுடை நீழலும் தன்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழ லவர்"—என்று வள்ளுவர் தெளிவு படுத்திபுள்ளார். ஆகவே நமது உணவு உற்பத்திப் பெருக்க முயற்சி பிறரை நம்பி இருக்கும் நிலையை மாற்றி அமைக்கும் நோக்கத்தில் வேகமாக செயல் படுத்தப்பட வேண்டும்.

விவசாய முன்னேற்றத்திற்கான ஆராய்ச்சிகள், தெளிவுகள், சூழ்நிலைகள் நம் நாட்டில் ஏராளம், ஏராளம். நம்மிடை உள்ள ஆராய்ச்சி முடிவுகளை இன்னும் எல்லோரும் தீவிரமாக உபயோகிக்கவில்லை. மேலும் அனுசரிக்கப்பட வேண்டிய திருந்திய முறைகளை ஒருங்கே எல்லாவற்றையும், எல்லோரும் அனுசரிப்ப தில்லை. ஒரு சிலர் அனுசரித்து பலன் காணுகின்றனர். இந்த நிலை மாற்றபபட வேண்டும். எல்லோரும சிறந்த விவசாய முறைகளை ஒருங்கே அனுசரிக்க வேண்டும்.

இப்பொழுது உள்ள அவசரகால சூழ்நிலையில் பிற நாடுகளை நம்பி இருக்கும் நிலை நீடிக்காமல் இருக்க உடனடி உணவு உற்பத்தி ஓர் அத்தியாவசியமாகும். இதனை சிறப்புற நடத்திட இந்நாட்டில் விவசாயப் பெரு மக்கள் ஒருமித்து திட்டமிட்டு உழைத்திட வேண்டும். இதற் கான ஒரு திட்டம் நமது மாநிலத்தில் உருவாக்கப்பட்டிருக் கிறது.

இதன் பிரகாரம் நமது மாநிலத்தில் சென்ற சில மாதங்களில் கிடைத்த பெரும் மழையின் காரணமாக குளங்கள், ஏரிகள நீர்த்தேக்கங்கள் இவற்றில் நீர்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனை சாதகமாகக் கொண்டு வசதி யையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தி உடனடியாக இந்த நவரைப்பட்டத்தில் அதிக விளைச்சலை உண்டு பண்ண வேண்டும். இதன் பிரகாரம் நம் மாநிலத்தில் சுமார் 3,25,000 எக்கரில் நெல் பயிரும், 4,500 எக்கரில் உயர்ந்த ரகச் சோளமும், 2,000 எக்கரில் உயர்ந்த ரகக் கம்பும் பயிர் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும் நவரை நெற் சாகுபடியை செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, சேலம் மாவட்டங் களிலும், ஒரு அளவில் மற்ற மாவட்டங்களிலும் பயிர்செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் மேற்கூறிய சாகுபடிப் பரப்பில் அதிக விளைவு தரக் கூடிய சிறந்த ரக நெல் பொறுக்கு வித்துக்களாகிய கோ. 29, டி.கே.எம். 6. போன்றவற்றைப் பயிர் செய்ய வேண்டும். இந்த பொறுக்கு விதைகள் அந்தந்தப் பகுதியில் கிராம சகாயக் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இந்த பயிர்களுக்கான இரசாயன உரங்கள், பூச்சி, பூஞ்சான நாசினிகள் கிடைப்பதற்கான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் சாகுபடிக் கான உற்பத்திப் பொருள் வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு அவைகளை கொள்வதற்கு நிதி உதவி கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* 14—1—1966 அன்று திருச்சி வானொலியில் ஆற்றிய உரை.

விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய நிலத்தில் விரைவில் அதிக விளைவை உற்பத்தி செய்து நாட்டின் உடனடித் தேவையை சரிசெய்ய முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெற்பயிரில் அதிக விளைச்சலை ஏற்படுத்துவதோடு இறைவைச் சாகுபடியிலுள்ள சிறுதானியங்களிலும் விரைவில் அதிகமான உற்பத்தியை ஏற்படுத்தும் முறையில், அபரிமிதமான விளைவைத் தரும் வீரிய ரகங்களை வாய்ப்பும் வசதியும் உள்ள பகுதிகளில் விநியோகித்து அவற்றை அப்பகுதிகளில் விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டுவதோடு பெருமளவு உற்பத்தியை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சுமாராக 4,000 ஏக்கரிலும், தஞ்சாவூரில் 500 ஏக்கரில் சி.எஸ்.எச். 1. என்ற வீரிய ரகச் சோளத்தை பயிர் செய்யவும் அதற்கான விதைகளையும் ரசாயன உரங்களையும் விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த ரகச் சோளம் நாட்டு ரகங்களைப் போன்று 2-3 மடங்கு அதிக விளைச்சலைத் தரவல்லது. இந்த ரகத்திற்கு அதிக அளவு இரசாயன உரங்களை இடவேண்டும். ஒரு ஏக்கருக்குக் குறைந்தது 80 ராத்தல் தழைச்சத்து அதாவது 400 ராத்தல் அமோனியம் சல்பேட், 40 ராத்தல் மணிச்சத்து அதாவது 250 ராத்தல் சூப்பர் பாஸ்பேட், 40 ராத்தல் சாம்பல் சத்து அதாவது 65 ராத்தல் பொட்டாஷும் இடவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு நாம் உரமிடுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிக விலைச்சலைத் தரக்கூடிய ஓர் அரிய ரகமாகும். இதனை விவசாயிகள் ஓர் வாய்ப்பாக மேற்கொண்டு தமது நிலத்தின் விளைவைப் பெருக்குவதோடு இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் நமது சுயதேவையைப் பூர்த்தி செய்திட முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சோளத்தில் சி.எஸ்.எச். 1 என்ற வீரிய ரகம் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, கம்பிலும் ஹெச்.பி. 1 என்ற ஓர் சிறந்த வீரிய ரகம் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த ரகம் நாட்டு ரகத்தைவிட 2-3 மடங்கு அதிக விளைச்சலைத் தரக்கூடியது. அந்த ரகத்தை அதற்கான அதிக அளவு இரசாயன உரத்தை இட்டு இறவைப் பயிராகச் சாகுபடி செய்ய வேண்டும். இந்த ரகத்திற்கு ஏக்கருக்கு 80 ராத்தல் தழைச்சத்து அதாவது 400 ராத்தல் அமோனியம் சல்பேட் வரை இடவேண்டும். இந்த ரக விதையும் அதற்கான இரசாயன உரமும் கிடைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த ரகத்தை மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் முறையே 500 ஏக்கர்களிலும் திருச்சி மாவட்டத்தில் 1,000 ஏக்கரிலும் பயிர் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய வீரியரகச்சோளம், கம்பு இவற்றில் சாகுபடிக்கான பூச்சி, பூஞ்சாளங்கொல்லி மருந்துகள் கிடைக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதிகளை தக்க வகையில் மேற்கொள்ள முன்வர வேண்டுமென்றும் இந்த திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதில் முழுப் பங்கை ஏற்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சூழ்நிலையை மேலும் தீவிரப்படுத்தவும், ஸ்திரப்படுத்தவும் ஆர்வமும் பற்றும் உள்ள விவசாயிகளை ஒருங்குபடுத்தி அவர்களுடைய எண்ணங்களை அதிகவிளைச்சலை உண்டு பண்ணுவதில் எடுத்துச் செல்லும் பாணியில் "டன்னேஜ் கிளப்புகள்" இந்த சந்தர்பத்தில் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த "டன்னேஜ் கிளப்பாகிய" விசேஷ விவசாயிகளின் சங்கத்தைச் சார்ந்தவர்கள் இந்த வித உயர்ந்த ரகங்களைப் பெற்று ஒரு ஏக்கரிலிருந்து 2–3 டன் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய உறுதி கூறியுள்ளனர். இதற்கு முன்னோடியாக செங்கற்பட்டு மாவட்டத்தில் "டன்னேஜ் கிளப்" ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதிக உற்பத்தி செய்வதற்கான முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இம்மாதிரியான இயக்கம் நம் மாநிலத்தில் எல்லா மாவட்டங்களில் ஏற்பட இருக்கிறது. இந்த அவசரகால உணவு உற்பத்தித் திட்டத்தின் வெற்றி விவசாயிகளின் தனி முயற்சியைப் பொறுத்திருக்கிறது. அம்முயற்சியை வழிப்படுத்துவதற்கு இந்த "டன்னேஜ் கிளப்" வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நெல், சோளம், கம்பு போன்ற தானியப் பொருள்களின் விளைச்சலைப் பெருக்குவதோடு அவற்றோடு அதிவிரைவில் பலன் தரக்கூடியதும் சத்துணவாகவும் அமைந்துள்ள காய்கறி உற்பத்தியைப்பற்றியும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். காய்கறி சாகுபடியைத் தீவிரப்படுத்துவதற்கான திட்டங்கள் ஏற்கனவே நமது மாநிலத்தில் முக்கிய நகரங்களிலும், மற்றப் பிராந்தியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காய்கறிச் சாகுபடிக்கான வசதிகளையும் கடன் உதவிகளையும் அரசாங்கம் கொடுத்து வருகிறது. இதன் பிரகாரம் உருளைக்கிழங்கு சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 900-ம், சமவெளிப் பகுதியில் காய்கறி சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ. 120-ம், மலைப் பிரதேசத்தில் காய்கறிச் சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ 200-ம் கடனாகக் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் காய்கறி விதைகளை பாதி விலைக்கும், காய்கறிகளைத் தாக்கும் நோய்களைத் தடுப்பதற்கும், பூச்சிகளை கொல்லுவதற்கும் மருந்துகள் பாதி விலைக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

காய்கறி சாகுபடி செய்வது சுயதேவைப் பூர்த்தியை அடிப்படையாக கொண்டதாகவும் அதிக விளைவு விற்பனைக்காக அமையப் பெற்றதாகவும் இருக்க வேண்டும். இதில் விவசாயிகள் மட்டுமன்றி வசதியுள்ள ஒவ்வொருவரும் தங்களை ஈடுபத்தி, தங்களுக்கான காய்கறிகளையும், சாகுபடி செய்ய வசதியுள்ளோர் பெருமளவிலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். காய்கறி உற்பத்தியும் அதன் உபயோகமும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உணவு தானியத் தேவை அளவில் குறைவும் உணவில் போஷாக்குச் சத்தின் தேவையின் நிறைவும் ஏற்படும் என்பதை விவசாயப் பெருமக்களும் பொதுமக்களும் அறிந்து முழு முயற்சியுடன் கலந்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

[7-ம் பக்கம் பார்க்கவும்

"சீமைக்குதிரை மசால்" கால் நடைத் தீவனத்திற்கும் வேலிக்கும் ஏற்ற பயிர்

டி. தானியல் சுந்தரராஜ், மு. நாகராஜன், வேளாண்மை கல்லூரி, கோவை.

சீமைக்குதிரை மசால் (Desmanthus virgatus) 'தாவர நுழைப்பு முறை' (Plant Introduction Programme) என்ற ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் 1952-ம் வருடம் முதல் கோவை விவசாயக் கல்லூரியின் தாவர ஆராய்ச்சிப் பகுதியில் பயிரிடப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்பட்டது. பல ஆண்டு ஆராய்ச்சியின் பலனால் இதை ஒரு சிறந்த கால் நடைத் தீவனமாகவும், வேலிப்பயிராகவும் பயன் படுத்தலாம் என்பது புலனாயிற்று. ஆகவே இப்பயிரைப் பற்றிய விவரங்கள் விவசாயிகளின் நன்மைக்கென்று கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சீமைக்குதிரை மசால் ஓர் அடர்த்தியான புதர்ச்செடி

சீமைக்குதிரை மசால் ஒரு நீண்ட காலப் புதர்ச்செடி (Perennial shrub). அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இப் பயிர், சம சீதோஷ்ண நிலப் பிரதேசங்களில் செழித்து வளர்வதற்கு ஏற்றது. இது மேற்கிந்தியத் தீவுகளிலும் ஹவாய் நாட்டிலும் ஒரு சிறந்த தீவனப் பயிராக பயிரிடப்பட்டு வருகிறது. இது 6 அடி முதல் 8 அடி வரை அடர்த்தியாக, நிறையக் காய்களுடன் வளரக்கூடிய ஓர் புதர்ச்செடி. இதை மானாவாரிப் பயிராகவும், நீர் பாசனத்தைக்கொண்டும் பயிரிடலாம்.

இது ஒரு சிறந்த வேலிப் பயிர்!

'வானம் பார்த்த பூமி' என்றழைக்கப்படும் மானாவாரி நிலங்களிலும், தோட்டக் கால்களிலும் சிறந்த வேலிப் பயிராக வளர்க்கலாம். இதை மற்ற பயிர்களைப் போலவே ஒரு குறிப்பிட்ட அளவுக்குவிட்டு அடிக்கடி கத்தரித்து விடலாம். அதனால் செடி பாதிக்கப்படாமல், அநேக பக்கக்கிளைகள் வெடித்து மிகவும் அடர்த்தியாக வளரும். கத்தரிக்கப்படும் கிளைகளை கால் நடைத் தீவனமாக உபயோகப்படுத்தலாம். ஒரு தடவை கத்தரிக்கும் போது 200 ராத்தல் தழை கிடைக்கும். மேலும் இப் பயிரை வீட்டுச் சுற்றுபுற ஓரங்களிலும், பண்ணைகளிலும் வேலியாகப் பயிரிடலாம்.

இது ஒரு சிறந்த தீவனப் பயிர்!

சீமைக்குதிரை மசாலின் தழை கால் நடைகளுக்குச் சத்துள்ள தீவனமாகும். இதை கால் நடைகள் மிகவும் விரும்பி உட்கொள்ளுகின்றன. இதில் கால் நடைகளுக்கு இன்றியமையாததான புரதச் சத்து, சாதாரண குதிரை மசாலில் (Lucerne) இருக்கும் அளவிற்கு இருக்கிறது. ஆகவே சீமைக்குதிரை மசாலை கால் நடைகளுக்குத் தீவனமாக உபயோகிக்கலாம்.

மேற்கூறிய விவரங்களிலிருந்து, சீமைக் குதிரை மசால் என்ற இப்புதர்ச் செடியானது ஒரு சிறந்த வேலிப் பயிராகவும், சத்துள்ள கால் நடைத் தீவனமாகவும் பயன்படும் என்பது தெளிவு. இதனை தங்களது நிலங்களில் பயிரிட விரும்புவோர் "தாவர வல்லுநர், வேளாண்மை கல்லூரி, கோவை—3" என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கூறியுள்ள அவசர கால உணவு உற்பத்தித் திட்டங்கள் நிறைவு பெறுவது நமது முயற்சியிலும் உழைப்பிலும்தான் அமைந்துள்ளது. ஆதலின் இப் பொங்கல் பொன்னாளில் விவசாயிகள் இந்நவரைப் பட்டத்தில் அனைவரும் வாய்ப்புகள் அனைத்தையும் முழுதும் பயன்படுத்தி, தீவிர சாகுபடி முறைகளை ஒருங்கே பின்பற்றி தங்கள் வருவாயை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். "உணவிற்காக பிறநாடுகளை நம்பி இராது நமக்குத் தேவைப்படும் உணவை நாமே உற்பத்தி செய்வோம்" என்ற உறுதிப் பாடுடன் உற்பத்திப் பெருக்கத்தில் உழவர்கள் ஈடுபடுமாறு விழைகிறேன். "போர்முனையில் வெற்றி கண்ட நாம் ஏர் முனையிலும் வெற்றி காணுவோம்! உணவிற்காக பிறநாட்டாரை அணுகோம், தன்னிறைவு காணுவோம்!" என்ற உறுதிப்பாடுடன் நம் விவசாயிகள் முன்னேற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

காவேரி மேட்டூர் பாசன ஒரு போக நஞ்சை நிலத்தில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி

(எஸ். சடையப்பன், எஸ். டி. சீனிவாசன், பேராவூரணி.)

பேராவூரணி களர் நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் அமைந்துள்ள பலதரப்பட்ட நிலங்களான மிதமான களர், அதிகமான களர் மற்றும் நல்ல நிலங்களில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி பற்றிய பரிசோதனை நடத்தப்பட்டது. அத்துடன் ஜூன் ஜூலை மாதங்களில் கிடைக்கும் காவேரி மேட்டூர் பாசன நீரைக்கொண்டு பலவகைப்பட்ட பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்ய முடியுமா என்பதும் 1961–62, 1962–63-ம் ஆண்டு களில் ஆராயப்பட்டது.

இவ்வட்டாரத்தில் பெரும்பாலும் களிமண் பூமி இல்லாத காரணத்தினால் பில்லுப்பயறு நீங்கலாக கொளுஞ்சி, சணப்பு, செஸ்பேனியா, தக்கைப்பூண்டு ஆகிய நால் வகைப்பயிர்கள் மட்டும் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன. நடைமுறைக்கேற்ப நெற்பயிர் அறுவடையாவதற்கு ஒரு வாரத்திற்கு முன் பி. எச். 7.5 காரச்சத்துள்ள நல்ல நிலத்திலும், பி. எச். 8.7 காரச்சத்துள்ள மிதமான களர் நிலத்திலும், கொளுஞ்சி விதைக்கப்பட்டது. இதர மூன்று பயிர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களோ மே-ஜூன் மாதங் களில் பெய்த மழையின் உதவியால் ஒரிரு உழவுகள் செய்து தயாராக வைக்கப்பட்டிருந்தன. ஜூலை மாதம் பாசனத்திற்கு தண்ணீர் வந்ததும் அதாவது சம்பா நெல் நாற்றுப் பாவுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் சணப்பு, தக்கைப்பூண்டு, செஸ்பேனியா இம்மூன்றையும் விதைத்து நாட்டுக் கலப்பையால் ஒரு உழவு போட்டு விதை களை மூடி நீர்ப் பாய்ச்சப்பட்டது.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட கொளுஞ்சிப்பயிர் வறட் சியை நன்கு தாங்கிக்கொண்டு விதைத்து இரண்டு மாத காலத்தில் 9 அங்குலம் முதல் 10 அங்குலம் வரை வளர்ந் திருந்தது. மிதமான களர் நிலத்தில் விதைக்கப்பட்ட கொளுஞ்சிப் பயிரோ உவரினாலும் வறட்சியினாலும் பாதிக் கப்பட்டு வளர்ச்சி குன்றி 3 அங்குலம் முதல் 4 அங்குலம் உயரம்தான் வளர்ந்திருந்தது. 1961-ம் வருடம் மே மாதத்தில் இலேசான மழைத் தூரலுடன் ஜூலை மாத ஆரம்பத்தில் இரண்டு தடவை தண்ணீர் பாய்ச்சியதில் கொளுஞ்சி நன்கு வளர்ந்து நல்ல நிலத்தில் 4091 கிலோ தழையும் மிதமான களர் நிலத்தில் 1285 கிலோ தழையும் கொடுத்தது.

கோடை மழை பரவலாகயிருப்பின் நல்ல நிலத்தில் சாகு படி செய்யக் கொளுஞ்சி சிறந்ததென்பதும் களர் நிலத் திற்கு உகந்ததல்ல என்பதும் மேற்கண்ட பரிசோதனையி லிருந்தும் சுற்றுப்புறமுள்ள இதர விவசாயிகளின் சாகு படியிலிருந்தும் புலனாகியது.

தக்கைப்பூண்டு மிக அதிகமான களரில் கூட ஓரளவு வளர்கிறது. ஆனால் மற்றவை இரண்டும் (சணப்பு, செஸ்பேனியா) முறையே இப்பண்ணையில் நல்ல நிலத் திலும் மிதமான களர் நிலத்திலும் பயிர் செய்யப்பட்டன. மிக அதிகமான களர் நிலத்தில் தக்கைப்பூண்டும், மிதமான களர் நிலத்தில் செஸ்பேனியாவும் விதைத்து சில காலம் வரை வளர்ச்சி குன்றியிருந்ததுடன், மண் இடத்துக்கிடம் மாறுபடுவதால் ஒரே வயலிலுள்ள பயிர் களின் வளர்ச்சியில் வித்தியாசமும் தென்பட்டது.

பசுந்தாள் பயிர் செய்த நாற்பத்தைந்து நாட்களில் வயலை நெல் சாகுபடிக்குத் தயார்செய்ய வேண்டியிருந்த போது அவற்றை வேருடன் எடுத்து உரமாக, உபயோகப் படுத்தப்பட்டன. சணப்பு நல்ல நிலத்தில் ஏக்கருக்கு 4640 கிலோ தழையும், செஸ்பேனியா மிதமான களர் நிலத்தில் (பி. எச். 8·8 முதல் 7·5 வரை) 2308 கிலோ முதல் 4758 கிலோ தழையும், தக்கைப்பூண்டு அதிக மான களர் நிலத்தில் (பி. எச். 9.1) 1087 கிலோ முதல் 5846 கிலோ தழையும், கொடுத்தது. இதன் பிரகாரம் பண்ணையிலுள்ள 7 ஏக்கர் நிலத்திற்கு வேண்டிய தழை உரம் உற்பத்தி செய்ய ரூ. 106 செலவானது. இத் தொகை அதற்கு முந்திய ஆண்டு தொழு உரம் வாங்க செலவழித்த தொகையைவிட ரூ. 127 குறைவு. இம் முறையைப் பின்பற்றி, 1962-63-ம் வருடம் பாசனத்திற்கு தண்ணீர் வந்தபின் பசுந்தழை உரம் உற்பத்தி செய்ததில் 7 ஏக்கரில் கிடைத்த நிகரலாபம் ரூ. 150.

இம்முறை, நிலத்தை வளப்படுத்தவும் அடுத்துவரும் நெல் சாகுபடிக்கு வேண்டிய தழை உரம் பயன்படுவதால் காவேரி மேட்டூர் பாசன நிலங்களில் விவசாயிகள் பின்பற்ற சாலச் சிறந்தது. களர் நிலங்களில் பசுந்தழை உரமிட்டதில் தீங்கு விளைவிக்கும் காரச்சத்துக்கள் பி. எச். 9·4 லிருந்து 8·8 ஆகக் குறைந்ததுடன் நிலத்தில் தழைச் சத்தும் ஏக்கருக்கு 108 ராத்தலிலிருந்து 138 ராத்தலாக உயர்ந்துள்ளது என்பது மண் பரிசோதனையி லிருந்து தெரியவந்தது.

செஸ்பேனியாவும், தக்கைப்பூண்டும் பலதரப்பட்ட நிலங் களுக்கு ஏற்றது என்றும் முந்திய மிதமான களர்நிலம் முதல் நல்ல நிலம் வரை ஏக்கருக்கு 2308 கிலோ முதல் 4758 கிலோ தழையும்; தக்கைப்பூண்டு அதிகமான களர் நிலம் வரை ஏக்கருக்கு 1087 கிலோ முதல் 5846 கிலோ தழையும் மிகக் குறுகிய காலத்தில் (45 முதல் 50 நாட்களில்) கொடுக்கும் என்பதை இப்பரிசோதனையின் முடிவு எடுத்துக்காட்டுகிறது. மேற்கண்ட முறையின் இதர நன்மைகளாவன :—

1. செழிப்புள்ள குச்சிக் கட்டைகளற்ற மிருதுவான பசுந்தழை உரம் கிடைக்கிறது.

2. அது 3 அல்லது 4 நாட்களில் நிலத்தில் நன்கு மக்கிவிடுகிறது.

3. பசுந்தழை வேருடன் எடுக்கப்பட்டு வயலில் போட்டு அழுத்த இலகுவானதாக அமைந்துள்ளது.

4. வயலை அடுத்துவரும் நெற்பயிருக்கு உழுது தயார் செய்ய எளிதாயிருப்பதுடன் வயலுக்கு கொடுக்கவேண்டிய உழவும் குறைகிறது.

5. உரமிட ஆகும் செலவில் ஏக்கருக்கு ரூ. 17 முதல் ரூ. 20 வரை மிச்சப்படுகிறது.

மெட்ரிக் முறை நீட்டலளவை



நடுத்தர வேகத்தில் நடக்கும் ஒரு மனிதர்

ஒரு மணியில் 5 லிருந்து 6 கிலோமீட்டர் தூரம் நடப்பார்.

ஒரு மைல் என்பது எவ்வளவு தூரம், அதை கடக்க எவ்வளவு நேரமாகும் என்று உங்களுக்குத் தெரியும். கிலோமீட்டர் என்பது எவ்வளவு தூரம், அதை கடக்க எவ்வளவு நேரமாகும் என்று தெரிந்து கொள்ளுங்கள். கிலோமீட்டருக்கும் மைலுக்கும் என்ன சம்பந்தம் என்று கணக்கிட்டு மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

மெட்ரிக் முறையை பின்பற்றி நன்மையடையுங்கள், நாட்டிற்கு உதவுங்கள்

மெட்ரிக் முறை எடைகளும், அளவுகளும் மட்டுமே தற்போது சட்டப்படி அமுலில் உள்ள எடை அளவுகளாகும்.

விவசாயச் செய்திக் கதிர்

(K. M. சுந்தரம், R. S. ஏர்னஸ்ட், விரிவினைப்பகுதி, விவசாயக் கல்லூரி, கோவை-3.)

உணவு உற்பத்தி பற்றி காலஞ்சென்ற பிரதமர் சாஸ்திரி.

காலஞ்சென்ற நமது பிரதமர் உணவு உற்பத்தியின் முக்கியத்துவம் பற்றியும் உணவு உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தியிருக்கிருர். இன்றைய நிலையில், நம் தேசத்தின் பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியத்துவத்தை நம் நாட்டின் உணவு உற்பத்தியும் பெற்றிருக்கிறது. நம் நாட்டின் உணவு சுயதேவை பூர்த்தி செய்தல் இன்றைய முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கான்பது, உணவு உற்பத்தி செய்யும் நமது விவசாயிகளிடத்தில் மட்டுமல்ல, உணவு உட்கொள்ளும் மற்றவர்களிடத்திலுமுள்ளது. ஆனல் நமது நாட்டின் உணவு சுய தேவையை பூர்த்தி செய்யும் பொறுப்பு, இதுவரைக்கும் நமது நாடு கண்டிராத அளவில் நமது விவசாயிகளிடத்தில் தற்பொழுது குவிந்திருக்கிறது. நாடு முழுவதும் உணவிற்காக விவசாயிகளையே நம்பிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நமது விவசாயிகள் என்ன செய்யப் போகிருர்கள்?

இதைக் குறித்து நமது பிரதமரின் கீழ்க் குறிப்பிட்ட பொனமொழியைக் கேளுங்கள்:—

"தற்பொழுது ஒரு தானியம் விளையுமிடத்தில் இரண்டு தானியங்களை விளைவியுங்கள். ஒரு பயிர் சாகுபடிச் செய்யுமிடத்தில், இரண்டு அல்லது மூன்று பயிர்களைச் சாகுபடி செய்யுங்கள். கம்போஸ்ட் அதிகம் உபயோகியுங்கள். அதிகமாக சிறு தானியங்களையும், காய்கறிகளையும் உற்பத்தி செய்யுங்கள். அதிகமான கிணறுகள் வெட்டுங்கள். தானியங்களை விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு வாருங்கள். கிடைக்கக் கூடிய உணவை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உணவு வீணுவதைத் தடுங்கள். வழக்கத்திலுள்ள உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றி அமையுங்கள்".

கோ. 7 ராகி மிக அதிக மகசூல் கொடுக்கும் திறன் வாய்ந்தது.

கோ. 7 ராகி எக்கருக்கு 2,400 ராத்தல் சராசரியாக மகசூல் கொடுக்கிறது. ஆனல் நவீனமுறையில் விவசாயம் செய்து, நன்ருக உரமிட்டால், இந்த கோ 7 ராகி தற்பொழுது கிடைக்கும் அதன் சராசரி மகசூலைக் காட்டிலும் அதிகம் கொடுக்கிறது. கோவை மாவட்டத்தில் ஒரு விவசாயியின் பண்ணையில் 1965-ஆம் ஆண்டு மே மாதம் ஒரு செயல் விளக்கம் இந்த ராகி வகையைக் கொண்டு நடத்தப்பட்டது. 1965-ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில் நன்ருகத் தயார் செய்யப்பட்டு உரமிடப்பட்ட 7½ செண்ட் நாற்றங்காலில் 3½ கிலோ கோ 7 ராகி விதை விதைக்கப்பட்டது. 25 நாட்கள் கழித்தபின்னர் நாற்றுகள் எடுக்கப்பட்டு ஒரு ஹெக்டர் நிலத்தில் (2·47 எக்கர்) நடப்பட்டன. இந்த ஒரு ஹெக்டர் நிலமும் நல்ல உழவு கிடைக்கும் வகையில் நன்ருகத் தயார் செய்யப்பட்டு, 50 வண்டி குப்பை உரம் போடப்பட்டு பரப்பப்பட்டது. பாத்திகள் அமைக்கப்பட்டன. நடவிற்குமுன் ஒரு ஹெக்டருக்கு 170 கிலோ அம்மோனியம் சல்பேட்டும் 213 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 45 கிலோ மியூரேட் ஆப் பொட்டாசியமும் (30 ராத்தல் நைட்ரஜனும், 30 ராத்தல் மணிச்சத்தும், 20 ராத்தல் சாம்பல் சத்தும் ஒரு எக்கருக்குக் கிடைக்கக் கூடிய அளவில்) உழவிலேயே போடப்பட்டது. நாற்று நட்டு 18 நாட்கள் கழித்த பின்னர் மற்ருெரு முறையும் 170 கிலோ அம்மோனியம் சல்பேட் வளரும் பயிர்களுக் கிடையில் போடப்பட்டது. ஒரு முறை களையெடுத்துக் கொத்திவிடப்பட்டது. பத்துத் தடவை வளரும் பயிருக்கு நீர் பாய்ச்சப்பட்டது. 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதக் கடைசியில் பயிர் அறுவடைக்கு வந்தது. ஹெக்டருக்கு 3,915 கிலோ ராகி மகசூலும், 27,170 கிலோ ராகித்தாளும் (எக்கருக்கு 3,487 ராத்தல் தானிய மகசூல், 24,200 ராத்தல் ராகித்தாள்) கிடைத்தது. இதனல் எக்கருக்கு 861 ரூபாய் நிகர வருமானம் கிடைத்திருக்கிறது. எனவே இந்தச் செயல் விளக்கம், முறையாக உரமிடப்பட்டு பயிர் செய்யப்பட்டால் கோ 7 ராகி மிக அதிக மகசூல் கொடுக்கும் என்பதைத் தெளிவாக்குகிறது.

உங்கள் காய்கறிச் செடிகளைப் பூச்சிகளிடமிருந்து காப்பாற்றுங்கள்.—காய்கறிகளைப் பயிர் செய்தல் தற்பொழுது மிகவும் முக்கியமானது. பூச்சித் தாக்குதலிலிருந்து பயிரைக் காப்பாற்றுதலே காய்கறிச் சாகுபடியில் மிகவும் முக்கியமான அம்சம். காய்கறிகளைத் தாக்கக்கூடிய முக்கிய பூச்சிகள் பழம் துளைக்கும் பூச்சியும், பழ ஈயும்தான். பழம் துளைக்கும் புழு, காய்களைத் துளைத்து உள்ளிருக்கும் திசுக்களை உட்கொண்டு காய்களின் வெளியே தன்னல் உண்டாக்கப்பட்ட துவாரத்தை தனது கழிவினுலேயே நிரப்புகின்றது. இவ்விதம் சேதமடைந்த காய்கள் விற்பனைக்கு தகுதியற்றதாகப் போய் விடுகின்றன. பழ ஈயின் புழுக்களும் காய், பழங்களைத் துளைத்து அவைகளைக் கீழே விழச் செய்கின்றன. எனவே காய்கறிகளைத் தாக்கும் முக்கியமான பூச்சிகளைப்பற்றியும், அவைகளைத் தடுக்கும் முறை பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்தப் பூச்சிகளைத் தடுப்பது மிகவும் சுலபம். முக்கியமான காய்கறிப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைத் தடுக்கும் முறைகள் கீழே கூறப்பட்டிருக்கிறது.—

1. **கத்தரிக்காய் புழுவைத் தடுக்க.**—0·1 சதவிகிதம் கார்பரைல் தெளியுங்கள் (அதாவது 1 ராத்தல் 85% செவின் மருந்தை 85 காலன் தண்ணீரில் கலந்தோ

[12-ம் பக்கம் பார்க்கவும்

தென்னை சாகுபடி

[வி. ஆர். வரதராசன், பி.எஸ்ஸி. (விவ.) தென்னை வளர்ச்சி உதவியாளர், அதிராம்பட்டினம்.]

தென்னை சாகுபடி செய்வோர் நல்ல பலன்களைப் பெற்று ஊதியம் அடையக் கீழே சொல்லப்படும் சாகுபடி முறையைக் கையாளுவது நலம்.

நில வகை.—தென்னை சாகுபடிக்கு எல்லா வகை மண்ணும் ஏற்றவை என்றாலும் வடிகால் வசதியுள்ள வண்டல் மண் சிறந்ததாகும். எனினும், செவ்வல், கரிசல் நிலங்களிலும், கால்வாய், ஆறு இவற்றின் கரைகளிலும் தென்னை நன்றாக வளரும். கடற்கரை ஓரங்களில் உள்ள மணற் பிரதேசமும் ஏற்றதுதான்.

நடவு முறையும் இடைவெளியின் பரிமாணமும்.—சதுர முறை அல்லது முக்கோண முறை கொண்டு சீராக நடவு செய்ய வேண்டும். முக்கோண முறை நடவில் 15 சதவிகிதம் அதிகப்படியான மரங்களுக்கு இடமளிக்க முடியும்.

கன்றுக்கு கன்று 25 அடியிலிருந்து 30 அடி வரை இடைவெளி விட்டால் போதுமானது. அதாவது ஏக்கருக்கு 60-லிருந்து 80 கன்றுகள் வரை நடவு செய்தல் சரியான முறை. ஏரி, கால்வாய், ஆறு இவற்றின் கரைகளில் 18-லிருந்து 20 அடி போதுமானது.

நடுவதற்கு வேண்டிய குழிகள் தயாரிப்பு.—கன்றுகள் நடுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே குழிகள் வெட்டிக் காயவிடவேண்டும். வளமான செம்மண் பூமி களில் சாதாரணமாய் 3′×3′×3′ அளவு குழிகளும், சரளை பூமிகளில் 4′×4′×4′ அளவுக்கு இருப்பதும் நல்லது. நெல் வயல்களிலும், கடற்கரையோரம், கழி நிலங்களிலும் மூன்றடி உயரத்தில் மூன்றடி சதுரத்திற்கு மண் திட்டுகள் போட்டு அவற்றில் கன்றுகள் நடுவது நல்லது.

நடுதல்.—தென்னங்கன்று நடுகிற தருணத்தில் குழிக் குள் ஓரடி ஆழத்திற்கு மேல் மண், மணல், 5 கிலோ கிராம் சாம்பல் முதலியவற்றை ஒன்றாகப் போடவேண்டும். கன்றைக் குழிக்குள் நடுமையம் பார்த்து வைத்து அதன் நெற்று நன்றாக மறையும்படி மேலே மண்ணைப் போட்டுக் கெட்டியாக அமுக்கிவிடவேண்டும்.

நடும் காலம்.—ஆடிப்பட்டமும், தைப்பட்டமும் நடுவ தற்குச் சிறந்தது. நீர் தேங்கக்கூடிய இடங்களில் பருவ மழைக்குப் பின் நடுவது நல்லது. காற்றினால் நட்ட கன்று ஆடாமல் இருக்கத் தேவையான கம்புகளை ஊன்றி கன்றுகளை இணைத்துக் கட்டவேண்டும். ஒன்பது மாதத்தி லிருந்து ஒரு வருடமான பொறுக்குத் தென்னங் கன்றுகளையே நடவேண்டும். பொறுக்குத் தென்னங் கன்றுகள் சர்க்கார் நாற்றங்கால்களிலிருந்து கிடைக்கும்.

நட்டபின் பாதுகாப்பு.—கோடையில் கன்றுகளுக்கு நிழல் கட்டுவதும், கால்நடைகள் கன்றுகளை மேய்ந்து சேதம் செய்யாதபடி கவனிக்க வேலிகள் போடுவதும் முக்கியம்.

நீர் பாய்ச்சுதல்.—நட்ட கன்றுகள் வேரூன்றி நிலைக்கும் வரையில் மழையில்லாதபோது சரிவரத் தண்ணீர் ஊற்ற வேண்டும். கன்றுகள் நட்ட முதல் வருடத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாளும், பிறகு கன்றுகள் 5 அல்லது 6 வயது ஆகும் வரையில் வாரம் ஒரு முறை அல்லது இரு முறை தண்ணீர் ஊற்றுவதும் நல்லது.

தென்னைக்கு போதுமான நீர் பாய்ச்சினால் மட்டும் 20 காய்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இதனால் வருடத்திற்கு ஏக்கருக்கு லாபம் ரூ. 325 கிடைக்கும்.

கோடையில் வறட்சி ஏற்படாமல் இருக்க ஊடு பயிர் செய்யலாம். கொளுஞ்சி, கலப்பக்கோனியம் போன்ற தழை உரச் செடிகளைப் பயிர் செய்வதால் கோடையில் நிலத்தின் ஈரம் பாதுகாக்கப்படுகின்றது. மணற்பாங்கான மண் கலந்த பூமிகளில் வரட்சி அதிகமாகக் காணப்படும். இங்கு வடிகுழாய் கிணறுகளை அமைத்து வேண்டிய அளவு நீர்ப் பாய்ச்சலாம். இரு தென்னை வரிசைகளுக்கு மத்தியில் சுமார் 6 அடி அகலத்திலும், 1—1½ அடி ஆழத்திலும் கிடங்கு வெட்டி உரி மட்டைகளின் உட்பக்கம் மேல் நோக்கிய வண்ணமாக குப்பை கூளங்களோடு போடவேண்டும். இதனால் உரிமட்டைகளை உரமாக உபயோகப்படுத்துவதல்லாமல், அவை மழைநீரை கிரகித்துக் கொண்டு கோடை மாதங்களில் மரங்களுக்குத் தண்ணீர் தொட்டியாகவும் உதவுகின்றது.

உரமிடுதல்.—உயிர் வாழ நமக்கு உணவு தேவை. அதுபோலத் தாவரங்களுக்கும் உணவு வேண்டியிருக் கின்றது. வருடத்தில் சுமார் 2,000 தேங்காய்கள் விளையும் ஒரு ஏக்கர் தென்னந்தோப்பில் 12 கிலோ தழைச் சத்தும், 12 கிலோ மணிச்சத்தும், 30 கிலோ சாம்பல் சத்தும் இழப்பு ஆகிறது என்று கணக்கிடப் பட்டிருக்கின்றது. இந்த உர இழப்பை நாம் வருடா வருடம் உரம்செய்து ஈடு செய்ய வேண்டும். பருவமழை யின்போது அதாவது புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் உரமிடலாம். ஐந்து வயதிற்கு மேற்பட்ட ஒரு மரத்திற்கு வருடம் ஒன்றிற்கு அமோனியம் சல்பேட் 1·5 கிலோ, சூபர் பாஸ்பேட் 1 கிலோ, மூரியேட் ஆப்பொட்டாஷ் 1 கிலோ அல்லது 20 கிலோ சாம்பல் தேவை. அல்லது விவசாயத்துறையால் சிபாரிசு செய்யப்படும் மூன்றாம் நம்பர் கலப்பு உரம் 5 கிலோ போடலாம். முதலில் 50 கிலோ பசுந்தாளுரம் அல்லது தொழுஉரம் போடுவது சிறந்தது. 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு மேற் சொன்ன உரத்தில் பாதியோ அல்லது நான்கில் ஒரு பகுதியோ போடலாம். மரத்தை மையமாகக் கொண்டு 3-லிருந்து 3½ அடி ஆழத்திற்கு ஒரு வட்டம் போட்டுக் கொள்ளவேண்டும். அதற்கும் வெளியே 3/4 அடி

அகலத்திற்கு, ¾ அடி ஆழத்திற்கு இடங்கு வெட்டி அதில் உரத்தைப் போட்டு மூடிவிடலாம். மரத்தின் வேர்கள் அதிக அளவிலே வெட்டுப்படாமல் இருப்பதில் கவனம் செலுத்தவேண்டும். உரம் செய்ய மரம் ஒன்றுக்கு செலவு 1½-லிருந்து ரூ. 2 வரை ஆகலாம். வருமானம் ஏறக்குறைய 8-லிருந்து ரூ. 10 வரை கிடைக்கும். உரம் செய்து பலன் கிடைக்க குறைந்தது 2½—3 ஆண்டுகள் ஆகும்.

இடை உழவு மிக அவசியம். வருடத்தில் மூன்று முறை உழவு அல்லது ஒரு முறை கொத்துதல் வேண்டும். மார்ச்சு—ஏப்ரலில் முதல் உழவு, ஜுன்—ஜுலை யில் இரண்டாம் உழவு, டிசம்பர்—ஜனவரியில் மூன்ருவது உழவு கொடுக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு.—தென்னையின் முதல் எதிரி காண்டா மிருக வண்டு ஆகும். கருப்பு நிறமுடைய, இவ்வண்டு குருத்து விரியாத பாளை இவைகளைத் தாக்கி நஷ்டப்படுத்து கின்றது. பெரிய வண்டுகளை இரும்புக் கொக்கி போட்டு எடுக்க வேண்டும். 5% பி. ஹெச். சி.-யை மணலுடன் கலந்து மட்டை இடுக்குகளில் போடலாம், குப்பையில் காணும் சாணிப்புழுதான் இவ்வண்டாக மாறுகின்றது. ஆகவே, புழு உண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தோப்பு துப்புரவாக இருத்தல், தோப்புகளில் கம்போஸ்ட் உரக் குழிகள் போடுவது, உரக் குழியில் 1% பி. ஹெச். சி. மருந்து தெளிப்பது போன்ற முறை களிளுல் புழு உற்பத்தியைத் தடுக்கலாம்.

தென்னை கூன்வண்டு எனப்படும் சிவப்பு வண்டும் அபாயமுடையது, இதற்குப் பரிகாரம் 'பைரகோன்' எனப்படும் மருந்து. இம் மருந்தை ஒரு பாகத்தை 100 பாகம் தண்ணீரில் கலந்து குழாய்மூலம் மரத்தினுள் செலுத்த வேண்டும். அளவு 100 முதல் 1500 சி. சி. வரை.

தென்னை ஓலைப்புழு அல்லது கருந்தலைப்புழு, பசுமை யான பாகத்தை சுரண்டி வாழும். தாக்கப்பட்ட ஓலைகளை வெட்டிப் புழுக்களோடு எரித்துவிடவேண்டும். டி.டி.டீ. 0.2% சதம் அடித்து இப்புழுக்களை ஒழிக்கலாம்.

குருத்தழுகல், சாறு வடிதல், அனுபிரோகம் அல்லது அடிமரமும் வேரும் அழுகல், இலைப்புள்ளி நோய் போன்றவை முக்கியமான நோய்களாகும். இவற்றில் குருத்தழுகல் கொடுமையானதொரு நோயாகும். இளங் குருத்து, இலைகள் வாடுவது இந்நோயின் அறிகுறி. சில சமயம் குறுத்து அழுகி துர்நாற்றத்தைக் கொடுக்கும், நோயால் தாக்கப்பட்ட குருத்தையும் இலைகளையும் வெட்டி எரித்து விடவேண்டும். பின் 1% போர்டோ கலவையை தெளிக்க வேண்டும்.

சாறுவடிதல் நோயினுல் தாக்கப்பட்ட மரங்களின் பாகங்களை உளியால் செதுக்கிவிட்டு தார் அல்லது போர்டோ கலவையை பூசிவிடவேண்டும். மரம் வளர் வதற்கேற்ற வசதிகளைக் கொடுத்தால் இந் நோயால் ஏற்படும் சேதத்தைத் தடுக்கலாம்.

மரங்களுக்கு நோய் வந்தாலும் வராவிட்டாலும் 1% போர்டோ கலவையை ஆண்டுக்கு ஒரு முறை தெளிப்பது மிகவும் நல்லது.

தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள அத்தனை விவசாயி களும் தென்னை சாகுபடிக்கு வழங்கப்படும் சலுகைகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு மேலே சொன்ன திருந்திய சாகுபடி முறைகளில் தென்னை பயிரிட்டு தேங்காய் விளைச்சலைப் பெருக்க முன்வருவார்களாக.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது 1 ராத்தல் 50% செவின் மருந்தை 50 ராத்தல் தண்ணீரில் கலந்தோ தெளிக்கலாம்). அல்லது 0·02% என்டிரின் தெளியுங்கள் (அதாவது ஒரு அவுன்சு 20% எண்டிரினை 6¼ காலன் தண்ணீரில் கலந்து தெளித்தல்) அல்லது டி.டி.டீ. 0·1% தெளியுங்கள் (அதாவது 10 ராத்தல் 50% டி.டி.டீயை 50 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்).

2. **வெண்டைக்காய்ப் புழு.**—0·06% கார்போ பினுேத் தியான் (**Carbophenothian**) (டிரயத்தியான்) (**Trithion**) ஒரு அவுன்சு மருந்தை 1¼ காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

3. **தக்காளிப் பழப் புழு.**—0·02% என்டிரின், அதாவது ஒரு அவுன்சு 20% எண்டிரினை 6¼ காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

பாகற்காய், புடலங்காய் பழ ஈ.—0·02% என்டிரின் (அதாவது ஒரு அவுன்சு 20%) என்டிரினை 6¼ காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இரண்டுஅல்லது மூன்று வாரத்திற்கு ஒரு முறை மேற்கண்டபடி மருந்து தெளிக்க வேண்டும். ஆனுல் மருந்து அடிப்பதற்கு முன்னர் முற்றிய காய்களைப் பறித்துவிட வேண்டும். மருந்து அடிக்கப்பட்ட பின்னர் பறிக்கும் காய்கறிகளையும் நன்ருகக் கழுவிய பின்னரே உபயோகிக்கவேண்டும்.

பருத்திக்காய் புழுவைத் தடுக்க.—காய்ப்புழுத்தாக்கு தலினுல் மொட்டுகளும், காய்களும் அநேக இடங்களில் சேதமடைகின்றன. காய்ப்புழு பருத்திச் செடிக்கு ஒரு பெரிய விரோதி என்பதில் சந்தேகமே இல்லை. இந்தப் புழுக்களைத் தடுக்க கீழ்க்கண்ட முறைப்படி மருந்து அடிப்பது நலமாயிருக்கும். 0·025% பாரத்தியானும் 0·1% டி.டி.டீயும் தெளியுங்கள். (அதாவது 4 அவுன்சு பாரத் தியானும் (அதாவது பாலிடால் அல்லது பாராமர்) 1 ராத்தல் டி.டி.டீ 50% பவுடரையும், 50 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்) அல்லது 0·02% என்டிரினும் டி.டி.டீ 0·1% அதாவது 8 அவுன்சு 20% என்டிரினும் ஒரு ராத்தல் டி.டி.டீ 50% பவுடரும் 50 காலன் தண் ணீருடன் கலந்து தெளிக்கலாம். இரண்டு அல்லது மூன்று வாரத்திற்கு ஒரு முறை மேற்கண்டவாறு மருந்து தெளிக்கவேண்டும். என்டிரின் டி.டி.டீ மருந்து தெளித்த பின்னர், பேன் ஏதாவது காணப்பட்டால், பின்னர் ஒரு தடவை பாரத்தியான் அல்லது கந்தக மருந்து அடிக்க வேண்டியது அவசியம்.

டாடா பைஸன் மற்றும் ராலி
இயற்கையின் மர்மங்களை ஆராய்கிறார்கள்!

எப்பொழுதும்போல் டாடா தொடங்கினார்: "இயற்கையின் மர்மங்களை விளக்குவது என்பது இயலாது."

"வர்ணமயமான பூக்கள், பட்சிஜாலங்கள், தேனீக்கள்..." என்று கவிபாடினார் பைஸன்.

"...அழகழகான பெண்கள்" இது ராலி. அவருடைய ஆலோசனையின் முடிவு!

டாடா தொடர்ந்தார்: "சின்னஞ்சிறு ரப்பர் செடியைப் பாருங்கள். அதனுடைய வாழ்க்கைத் தத்துவம், ஆகா, வெண்மையான பகட்டற்ற ரப்பர்."

"இயற்கையின் அற்புதத்தை யாரால் அளவிட முடியும்?" என்றார் பைஸன்!

"ஆம், அவள் பெயர் கல்பனா" என்று ஆவேசத்துடன் மொழிந்தார் ராலி.

இடையூறுகளை ஒதுக்கிவிட்டு மேலும் கூறுகிறார் டாடா: "இந்த சின்னஞ்சிறு ரப்பர் செடியில் இயற்கை தன் வளமையை வெளிப்படுத்துகிறது. ரப்பரிலிருந்துதான் எத்தனை பொருள்கள்... டயர்கள், ஸஸ்பெண்டர்கள், கன்வேயர் பெல்ட்டுகள், விளையாட்டு பலூன்கள்..."

"உண்டை வில்" என்றார் பைஸன்.

டாடா மேலும் சொல்கிறார்: "வியாபார ரீதியாகப் பாருங்கள். ராலியின் 'மரம்' மார்க் உரங்கள் மேலும் சிறந்த ரப்பர் பயிரை உற்பத்தி செய்ய உதவுகின்றன. டாடா பைஸன் பூச்சி மருந்துகளோ அவற்றைப் பாதுகாத்து மேலும் அதிகமான விளைச்சலுக்கு வழிசெய்கின்றன."

"அவளுடைய வீட்டுப் பெயர் என்ன என்பதை நான் அறியேன்" என்று முணுமுணுத்தார் ராலி.

டாடா பைஸன் ராலீஸ் பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது

TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES

SHBI-RF-89 TAM

பவானிசாகர் பண்ணையில் புகையிலை நாற்றங்கால்

[கே. சப்தரிஷி, மாநில புகையிலை பெருக்க அலுவலர், என். வெங்கட்டராமன், கண்காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சிப்பண்ணை, பவானிசாகர், சி. என். சுப்பிரமணியன், புகையிலை பெருக்க உதவியாளர், சி. டி. அனந்தபத்மநாபன், பண்ணைமேலாளர், பவானிசாகர்.]

1962–63-ம் ஆண்டில் இவ்வாராய்ச்சிப் பண்ணையில் புகையிலை நாற்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்க புகையிலைப் பெருக்கத் திட்டத்தின்கீழ் கண்காணிப்பாளரின் பெரும் ஒத்துழைப்பின் பேரில் அதிக அளவில் நாற்றங்கால்கள் போடப்பட்டன. முதன்முறையாக 2·50 எக்கரா பரப்பளவில் புகையிலை நாற்றங்கால் உருவாகியது. $9\frac{1}{2}$ அடி நீளமும் 5 அடி அகலமும் உள்ள பாத்திகள் பல போடப்பட்டன. சுமார் 1600 மேடைப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இதுவரை இருந்த இடம் தெரியாமல் "குடத்திற்குள் ஏற்றிய விளக்கு போல்" விளங்கி வந்த பவானிசாகர் பண்ணை, இன்று 'குன்றின் மேலிட்ட தீபம் போல்' புகையிலை நாற்றங்காலிட்டதால் துலங்க ஆரம்பித்துள்ளது. 1962–63, 1963–64 ஆண்டுகளில் முறையே 6 லட்சம், 8 லட்சம் நாற்றுக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. பண்ணைக்கு நிகரலாபம் எக்கராவிற்கு ரூ. 309 வீதம் கிடைத்தது என்றால் இது வியக்கத்தக்க விஷயமாகும். இந்த அபரிமிதமான லாபமும், நற்பெயரையும் அடைய எவ்வாறு முடிந்தது ?

புகையிலை நாற்றழுகல் நோய்

ஒவ்வொரு பாத்தியும் $9\frac{1}{2}$ அடி நீளமும் 5 அடி அகலமும் கொண்டதாக இருக்கும். இப்பாத்தியை நன்றாகக் கொத்தி, கட்டி முட்டிகளைத் தட்டி, புல், பூண்டுகளைக் களைத் தெறிந்து, பின்பு சமமாகப் பாவி விட்டபின் உள்பாத்தியின் நீளம் 8 அடியும், அகலம் $3\frac{1}{2}$ அடியும் கொண்டதாகவும் இருக்கும்படி சுற்றிலுமுள்ள 3/4 அடிக்கு மண்ணை அகற்றி பாத்தியின் மத்தியில் கொட்டி நிரப்பி விட வேண்டும். 8 அடி நீளமும், $3\frac{1}{2}$ அடி அகலமுள்ள பாத்தியைச் சுற்றிலும் 3/4 அடி அகலமும் அரை அடி ஆழமும உள்ள வாய்க்கால் போல் பள்ளமாக இருக்கும். இதனால் வாய்க்காலில் தண்ணீர் விட்டவுடன் இந்தப் பள்ளத்தில் தண்ணீர் பாய்ந்து மேடையில் தண்ணீர் பரவும். 20 அடி நீளமுள்ள சாதாரண பாத்திகளில் கால் பாகம் மேடிட்டுப் போய் விதைகள் முளைக்காமல் போவது மட்டுமன்றி மண் மேடிட்டு போய்விடுகிறது. ஆனால் மேலே கூறப்பட்ட சிறு பாத்திகளில் தண்ணீர் ஒரே சீராகவும், மெதுவாகவும் பாய்வதால் மண் அரிப்பது மில்லை; விதைகளை மண் மூடுவதுமில்லை. விதைகளும் விழுந்த இடத்தில் மண்ணில் அமிழ்ந்து முளைக்க ஏதுவாகிறது. இவ்விதம் பாத்தியை அமைத்தபின், பண்ணையில் உள்ள கழிவுப் பொருள்களான ரசிகத்தாள், சணப்புக் குச்சி, கம்பந்தட்டு முதலியன லேசாகப் பரப்பி எரிய விடப்பட்டன. இவ்விதம் செய்வதால் மண்ணிலுள்ள கிருமிகள் செத்துப்போக வழியாகிறது. புல், பூண்டுகள் எரிந்து போகின்றன. வேர் முடிச்சு விழாமலிருக்க உதவுகிறது. சாம்பலை நன்றாக மண்ணுடன் கலந்து கொத்தி விடுவதால் நாற்றுக்கள் கருகருவென வளரவும் உதவுகிறது. இதை மண்ணுடன் கலந்து கொத்தி சமனப்படுத்தியபின் பாத்திவொன்றுக்கு நன்றாகப் பொடி செய்யப்பட்ட எரு 2 காரைச் சட்டி அளவு பாத்தியில் கொட்டி, நன்றாக சுமார் $\frac{1}{2}$ அடி அளவு கனத்திற்கு பரப்பி விடப்படவேண்டும். பாத்தியொன்றுக்கு 2 கிராம் விதை எடுத்து நல்ல சிறுமணலுடன் இரு கைப்பிடி கலந்து விதையையும் மணலையும் பாத்தியில் ஒரே மாதிரி

புகையிலை நாற்றங்கால்

சீராக விழும்படித் தெளித்து லேசாகக் கிளறி விட வேண்டும். பின் மர உருளையிருந்தால் லேசாக உருட்டலாம். அல்லது மண்வெட்டியால் லேசாக விதை மண்ணில் அமிழ்ந்து போகும்படி தட்ட வேண்டும். தண்ணீரை அதிக வேகமாக பாத்தியில் பாய்ச்சாமல்,

லேசாக படியும்படி செய்தல் அவசியம். இதற்கு தண்ணீர் பாய்ந்து வரும் வாய்க்காலில் கிளிரிஸிடியாவினால் ஆன சிறுகட்டு அல்லது ராகித்தாள் போன்ற கழிவுப் பொருள்களாலான சிறுகட்டு குறுக்கே வைத்தால் மண் அரிப்பதைத் தடுப்பதோடு, மேடைப் பாத்திக்கு யாதொரு சேதமும் இல்லாமல் நீர் பாய வழியேற்படுகிறது. இம் மாதிரி பாத்திகளிலிருந்து சுமார் 1000 முதல் 2000 நாற்றுக்கள் வரை கிடைக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் 6 பாத்திகள் இருந்தால் ஒரு ஏக்கரா முதல் 2 ஏக்கரா வரை நடவு செய்ய முடியும்.

நாற்றங்காலைப் பேணும் முறை.

3 வாரங்கழித்து, சிறு நாற்றுக்கள் வெம்மை தாங்காமல் 'அழுகல் நோய்'க்கு இலக்கு ஆவதைக் காணமுடியும். அதைத் தடுக்க 'மயில் துத்தக் கலவை அல்லது வேறு தாமிர மருந்துக் கலவை அடிக்க வேண்டும். மோடம் கட்டும் போதெல்லாம் முன்பாகவே வாரத்திற்கொரு முறையோ, அல்லது இருமுறையோ தெளிக்க வேண்டும். அதிக நெருக்கமாக முளைத்துள்ள இடத்தினின்றும் நாற்றுக்களைக் களைத்தும், புல், பூண்டுகளை அகற்றியும் பாத்தியை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். மேற்குறித்தபடி கண்டிப்பாக கண்காணித்து வந்தால், நல்ல பலன் கிட்டும். இம்மாதிரி உத்திகளைக் கையாண்டதால் அரசாங்கப் பண்ணையில் நல்ல பலன் கிடைத்துள்ளது. அதன் வரவு செலவுடன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

விபரம்	மொத்த செலவு (2·50 ஏக்கராவிற்கு).
1. விதைக்கும் முன் செய்யும் உழவு முதலியன.	ரூ. 175·85
2. எருவும், எருவிடுதலும் ..	ரூ. 121·01
3. விதையின் கிரயமும், விதைத்தலும்	ரூ. 118·72
4. விதைத்த பின் களையெடுத்தல் முதலியன.	ரூ. 532·51
5. தண்ணீர் கட்டுதல் ..	ரூ. 324·51
6. நாற்றுக்களைப் பிடுங்குதல் ..	ரூ. 216·01
7. நோய் நொடிகளைத் தடுக்க மருந்து தெளித்தல், மருந்தின் கிரயம் முதலியன.	ரூ. 155·75
மொத்தம் ரூ.	1,644·77

விற்பனை செய்யப்பட்ட மொத்த நாற்றுகள் ..	8,05,625
1,000 நாற்றுகளின் விலை ரூ. 3 வீதம் 8,05,625 நாற்றுகளின் கிரயம் ..	ரூ. 2,416·88
8,05,625 நாற்றுகள் உற்பத்தி செய்ய ஆன செலவு	ரூ. 1,644·77
நிகர லாபம் ரூ.	772·11

$2\frac{1}{2}$ ஏக்கராவிற்கு லாபம்	ரூ. 772·11
1 ஏக்கரா நாற்றங்காலுக்கு சுமார்	ரூ. 309

பவானி சாகர் பண்ணை சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்டு, சீர்திருத்தப்பட்ட பண்ணையாதலால் களையெடுத்தல் போன்ற செய்கைகளில் அதிகம் செலவாகியுள்ளது. நல்ல தோட்டக்கால் பூமிகளில் செலவு மிகவும் குறைவாக இருக்கலாம்.

1962–63–ஆம் ஆண்டில் . தனியார் தோட்டங்களில் நாற்றுகள் அதிகம் சேதமேற்பட்டதால், மக்கிரி (சுமார் 3000 நாற்றுக்கள் கொண்டது) ரூ. 25, 30 வீதம் விற்றுர்கள். ஆனால் அதே சமயம் ஆராய்ச்சிப் பண்ணையில், ஆயிரம் நாற்றுக்கள் ரூ. 3 வீதம்தான் விற்கப்பட்டுள்ளதை கவனிக்கவும். சுமார் 8 லட்சம் நாற்றுக்கள் கோவை மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு 150 ஏக்கராவிற்கு நல்ல உயரிய பொறுக்கு விதை நாற்றுக்கள் கிடைக்க வழி செய்யப்பட்டது.

பவானிசாகர் பண்ணையில் முதன்முறையாக செய்து காண்பிக்கப்பட்ட 'மேடைப்பாத்தி' நாற்றங்கால் (Raised bed nursery) அங்கு தினந்தோறும் வந்து வாங்கிச் சென்ற விவசாயிகள் யாவருக்கும் நல்ல படிப்பினையாக அமைந்தது.

எனவே புகையிலை மேடைப்பாத்தி நாற்றங்கால் போடுவதில் நினைவில் கொள்ளவேண்டிய குறிப்புகள்.—

1. மேடைப்பாத்தியிட்டு சிறுபாத்திகளாக இருப்பது அவசியம். தண்ணீர் சமமாகப் பாய வசதியாக இருக்கும்.

2. பாத்தியொன்றுக்கு 2 கிராம் விதையே போதுமானது. மணலுடன் கலந்து லேசாகத் தெளிக்க வேண்டும்.

3. குப்பை கூளங்கள் (trash) எரிக்கப்பட வேண்டும். முடிச்சுவேர் விழாமல் தடுக்க இது உதவுகிறது. பூச்சி, புழுக்களும் வெந்து போகின்றன.

4. பாத்தியொன்றுக்கு 2 காரைச் சட்டி எரு இட வேண்டும். உவர் நீராக இருந்தாலும்கூட நாற்றுக்கள் சாவதில்லை. புகையிலை விதை முளைத்தவுடன் எருவிலுள்ள சத்தைக் கிரகித்து வலுவுள்ளதாக (Sturdy) இருக்க முடிகிறது. கிணற்று நீர் உவர் நீராக இருந்த போதிலும் இளம் நாற்றுக்களை பாதிப்பதில்லை.

5. தண்ணீர் மேடைப்பாத்தியிலிருக்கும் சிறு நாற்றுக்களுக்கு ஊறு செய்வதில்லை. சுற்றிலுள்ள வாய்க்கால்களில் சென்று தண்ணீர் மேடைமேல் ஏறுவதால் மண்ணில் விழுந்த விதை இடமாற்றமில்லாமல் முளைத்தெழுகிறது.

6. மூன்று வாரங் கழித்து நாற்றுக்கள் "அழுகல் நோயால்" (damping off) சேதமடையாமலிருக்க கட்டாயம் "மயில் துத்தக்கலவை" அல்லது பிற தாமிர வகை மருந்துக் கலவைகளை தெளிக்கவேண்டும்.

7. அதிக நெருக்கமாக முளைத்துள்ள நாற்றுக்களை களைக்க வேண்டும். புல், பூண்டுகளை எடுக்கும்பொழுது

[19-ம் பக்கம் பார்க்கவும்

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

N. V. வீரணன், நந்திக்குண்டு, ராமநாதபுரம்.

கே: எங்களது ஊரில் மிளகாய்ச் செடியில் கற்ருழைப் பூச்சி அதிகமாக விழுந்து செடியை நாசப்படுத்துகிறது. கற்ருழைப் பூச்சி என்ருல் அதாவது இலைக்கள்ளிச் செடியிலுள்ள பூச்சி மிளகாய்ச் செடியில் விழுந்து செடிகளைச் சேதப் படுத்துகிறது. அதற்கு என்னென்னவோ வழி செய்தும் கட்டுப்படவில்லை. தாங்கள் அதற்கு நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ப: மிளகாய்ச் செடியில் விழுந்துள்ள மாப்பூச்சியை ஒழிக்க பாலிடால் அல்லது பாரத்தியான் மருந்து 1 அவுன்ஸ் மருந்துக்கு 12½ காலன் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்கவும்.

கே: எனக்கு மேழிச்செல்வம் புத்தகம் தேவைப் படுகிறது. அதற்கு வருடச்சந்தா மற்றபடி தபாலில் அனுப்புச்செலவு என்ன ஆகும் என்பதைத் தெரியப் படுத்தும்படி அதிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ப: மேழிச்செல்வத்திற்கு ஒரு ஆண்டுச் சந்தா ரூ. 3 ஆகும். இதை உங்களுடைய வட்டார விவசாயக்கிடங்கில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும். தாங்கள் சந்தா கட்டியுள்ள செய்தியை சென்னை விவசாயச் செய்தித்துறைக்கு அனுப்பி விடுவார்கள். அதன் பின் உங்களுக்கு மாதா மாதம் மேழிச்செல்வம் சஞ்சிகை வந்து சேரும்.

ச. சுப்பையன், முறம்புக்காடு, சேலம் மாவட்டம்.

கே: எக்ஸ் 3 (X3) கம்பு பயிரிட நிலம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். இதனைப் பயிரிட ஏற்ற காலம், நிலம் எவை, விதை எங்கு கிடைக்கும்? முக்கியமாக எக்ஸ் 3 ஒட்டுக் கம்புவிதையைப்பற்றி விரிவாக விளக்க வேண்டுகிறேன்.

ப: எக்ஸ் 3 ஒட்டுக்கம்பு செவ்வல் பூமியிலும், கரிசல் பூமியிலும், மானாவாரியாகவும் நீர்ப்பாசனத்தைக் கொண்டும் பயிர் செய்வதற்கு ஏற்றது. இதை மானாவாரியாக செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விதைக்கலாம். இந்தப் பயிரின் வயது 85 முதல் 90 நாட்கள். இதற்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்ட்டுடன் 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டும் எக்கருக்குப் போட்டு பயிரிட்டால் மானாவாரியாக பயிரிடும் பூமியிலிருந்து 600 ராத்தல் முதல் 800 ராத்தல்வரை தானிய மகசூல் அடையலாம்.

நீர் பாசனத்தைக்கொண்டு பயிரிடுவதற்கு ஏற்றகாலம் எப்ரல் முதல் ஜூன்வரையாகும். இதற்கு பத்துவண்டி தொழு உரத்துடன் 125 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும் 200 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டும் போட்டுப்பயிரிட்டால் 2000 ராத்தல்வரை தானியமகசூல் அடையலாம்.

எக்ஸ் 3 ஒட்டுக் கம்பின் வீரியத்தன்மை ஒரு பட்டத்திற்குப்பின் மிகவும் குறைந்து விடுகிறபடியால் ஒவ்வொரு பட்டத்திற்கும் புதிய விதைகள் வாங்கி விதைத்தல் அவசியம்.

ஒட்டுக்கம்பின் விதைகள் "சிறுதானியநிபுணர், கோவை" என்ற முகவரிக்கு அல்லது "உதவி சிறுதானிய நிபுணர் சத்திய மங்கலம்" என்ற முகவரிக்கோ எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

சி. வேலுச்சாமி, தேவராயபுரம், கோவை 2.

கே: இந்திய அரசாங்கத்தாரால் விவசாயிகட்கு தரப்படும் நிதி உதவியையும் கடன் பெறும் வசதியையும் பெற தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு இடங்களையும் குறிக்கவும்.

ப: விவசாய சம்பந்தப்பட்ட எல்லா நிதி உதவியும் கடன்களும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் மூலமாகவே கொடுக்கப்படுகின்றன. தங்கள் வட்டார பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் பணிபுரியும்

விவசாய விஸ்தரிப்பு அலுவலருடன் தொடர்பு கொண்டு தேவையான விபரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மேழிச்செல்வம் சந்தாதாரராகச் சேர்ந்து தொடர்ந்து மேழிச்செல்வத்தை படித்து வருவீர்களானல் எல்லா விஷயங்களையும் அவ்வப் பொழுது தெளிவாகத் தெரிந்து கொள்ள ஏதுவாகும்

ஆர். ராஜாக்கணி, கமுதி.

கே: விவசாயக்கருவிகளான வரப்பு கட்டுதல், கடலை உடைத்தல், பாத்திகட்டுதல் முதலான உப யோகத்திற்கு உதவக் கூடிய இயந்திரங்களை எங்கு உற்பத்திசெய்கிருர்கள். உற்பத்தியாளர்களின் விலாசம் என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டு கிறேன்.

ப: வரப்பு கட்டுதல், பாத்திகட்டுதல் முதலான உப யோகத்திற்கான விவசாயக்கருவிகள் 50 சதவிகிதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் விநியோகிக்கப்படுகின்றன. தங்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகளுக்கு தங்களுடை வட்டார விவசாய விஸ்தரிப்பு அதிகாரியை அனுகவும்.

கே: ஏ. டி. டி. 27 (A.D.T. 27) என்கிற புதுரக நெல் விதையை எந்த மாதத்தில் எந்த தேதிக்கு மேல் நாற்றுவிடலாம்; நாற்றை எத்தனை நாட்களில் எடுத்து நடவு செய்யலாம்; நெல்லினுடைய மொத்த வயது என்ன? ஒரு ஏக்கருக்கு எவ்வளவுமகசூல் கிடைக்கும். எந்த மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது? ஏ.டி.டி. 27 நெல்லை என்னென்ன நோய்கள் அதிகமாகத் தாக்குகிறது? என்ன மருந்து உபயோ கிக்கலாம்.

ப: ஏ.டி டி. 27 நெல்லை ஜூன் மாதம் 10 தேதி முதல் 20 தேதி வரை நாற்றுவிடலாம். நாற்றை 25 நாட் களில் எடுத்து நடவு செய்யலாம். இதன் மொத்த வயது 105 நாட்கள். ஆராய்ச்சிக்கூடத்தில் 4,266 ராத்தலும், ஜில்லாக்களில் நடத்திய பரிசோதனை களில் சராசரி 3963 ராத்தல் நெல்விளைவும் கொடுத்திருக்கிறது. ஜூன், ஜூலை மாதங்களில் விதைத்த நெல் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அறுவடைக்கு வருகிறது.

தகுந்த பருவத்தில் விதைத்து அறுவடை செய்தால் எந்த நோயும் அதிகமாகத் தாக்குவதில்லை.

ஆர். சொக்கண்ணன், முதலியார் தோட்டம், வேளாள பாளையம், ஜம்பை.

கே. விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய கடன் உதவிகள் உண்டா என்பதையும், புதிய பாசனக் கிணறு வெட்ட ரூ. 5,000 கிடைப்பதை அறிவேன். ஆனல், அத்தொகை எவ்வளவு நாட்களுக்குள்ளாகும் என்பதையும் தயவு செய்து தெரியப்படுத்தவும்.

ப: விவசாயிகளுக்கு பாசனத்திற்கு புதிய கிணறு வெட்டவும், இரசாயன உரங்கள் வாங்கவும், நீர்ப் பாசனத்திற்கு ஆயில் என்ஜின், மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வைக்கவும், பழத்தோட்டங்கள் அமைக்கவும், விவசாயம் செய்ய உழவு மாடுகள் வாங்கவும், காய்கறி அபிவிருத்தித் திட்டம் அமுலில் உள்ள இடங்களில் காய்கறி பயிர் செய்யவும் கடன் உதவிகள் செய்யப்படுகின்றன. தங்களுடைய தேவைக்கு உங்களுடைய வட்டார பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தை அனுகவும்.

புதிய பாசனக் கிணறு வெட்ட கடன் தொகை கிடைக்கும் காலமானது நீங்கள் விரைவில் விண் ணப்பம் செய்துகொள்வதையும் விண்ணப்பத்தில் கேட்டுள்ள விவரங்களை சரிவர விரைவில் சமர்பிப்ப தையும் பொறுத்துள்ளது.

பி. ஜெயராஜ், கொற்கை பஞ்சாயத்து அலுவலகம், ஸ்ரீ வைகுண்டம்.

கே: நான் ஒரு விவசாயி பரம்பரையைச் சேர்ந்தவன். எங்கள் ஊரில் உள்ள அநேகருக்கு நிலங்கள் எல்லாம் உவர் நிலங்களாகக் காணப்படுகின்றன. விளைச்சல் 25 % தான் கிடைக்கிறது. மேற்படி அந்த உவர் நிலங்களை எப்படி நன் முறையில் உவர் பிடி யாத நல்ல நிலமாக மாற்றலாம்? எந்த விதைகளை வைத்து விதைக்கலாம்? எப்படிப்பட்ட உரங்கள் போடவேண்டும்? தொளி எப்படி அமையவேண்டும் P.V.R. 1, S.R.26 B விதைகளை உபயோகிக் கலாமா? அந்த விதைகளை விவசாய ஆபீசில் எப்படி வாங்கலாம்?

ப: மண் பரிசோதனைச் சாலைகளில் மண்ணில் உள்ள கார அமிலத்தன்மையின் அளவை மதிப்பிட்டுத்தர்ன் உவர், களர் நிலங்களை திருத்த வேண்டிய சிபாரிசுகள் செய்யப்படும். நீங்கள் கூறும் உவர் நிலங்களிலிருந்து மண் மாதிரிகள் எடுத்து "உதவி மண் இரசாயன வல்லுனர், மண் பரிசோதனை நிலையம், கோவில் பட்டி" என்ற முகவரிக்கு அனுப்பி மண் பரிசோ தனைக்குப் பின் சிபாரிசு செய்யும் வழி முறைகளைக் கையாளுங்கள். மண் மாதிரி எடுக்கும் முறை முன்பே கொடுக்கப்பட்டுள்ளது.

மண் மாதிரி எடுத்தனுப்ப உங்களுடைய வட்டார விவ சாய விஸ்தரிப்பு அதிகாரி உங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வார். அவருடன் தொடர்பு கொள்ளவும்,

பயிரிடக்கூடிய களர், உவர், நிலங்களில் (P.V.R). பி. வி. ஆர். 1 என்ற நெல்லையும் எஸ். ஆர். 26 பி என்ற நெல்லையும் பயிரிடலாம். இவ்விதைகள் உங்களுடைய வட்டார விவசாயக் கிடங்கிலேயே விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

*டன்னேஜ் கிளப்

திரு வி. கே. ராமசாமி முதலியார், M.L.C.

நமது நாட்டில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்ததே. சுதந்திரம் அடைந்து பதினெட்டு ஆண்டுகள் ஆயினும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்த பின்னும், நாம் நம்முடைய அடிப் படைத் தேவையான உணவுப் பொருட்களுக்கு அயல் நாடுகளை நம்பியிருப்பது மிகவும் கவலைக்கிடமானது.

இது ஒருபுறம் இருக்க, நம் நாட்டு விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் குன்றிய நிலையில் இருந்துவருகிறது. விவசாயி தனக்கு இயன்ற மட்டும் பாடுபட்டாலும் தன்னுடைய நிலையை உயர்த்திக்கொள்ள முடியாதவனாய் இருக்கிறான்.

இதன் காரணம் என்ன? ஆராய்ந்து பார்த்தால், இதன் அடிப்படைக் காரணம், நம்முடைய நிலங்களின் விளைவுக் குறைவுதான். அயல் நாடுகளில் உதாரணமாக ஜப்பானில் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து சராசரி 2000 கிலோ அல்லது சுமார் 36 மூட்டைகள் நெல் விளைகிறது. நம்முடைய நாட்டில் 600 கிலோ அல்லது சுமார் 11 மூட்டைகள்தான் சராசரி விளைச்சல். ஆகையால் நம்முடைய நாட்டின் உணவு பற்றுக்குறை நீங்கவும், நம்முடைய நிலத்தின் உற்பத்தி அதிகப்படுத்தப்படவேண்டும்.

நம்முடைய நாட்டையே பார்க்கும்பொழுது சிலர் தங்களுடைய நிலங்களில் சுமார் 60 மூட்டைகள் வரை உற்பத்தி செய்துள்ளனர். இதனால் மற்ற விவசாயிகளும் உற்பத்தியை பெருக்க முடியும் என்பது தெரியவருகிறது. உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் அநேக ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தி ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர். இவைகளின் பயனாக சிறந்த பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்துள்ளனர். குறிப்பாக ஆடுதுறை 27 என்ற ஒரு ரகத்தை சமீபகாலத்தில் வெளியிட்டிருக்கின்றனர். சரியான அளவு உரமும், பூச்சி மருந்துகளும் உபயோகப் படுத்தினால் இது ஏக்கருக்கு சுமார் 1950 கிலோ அல்லது 35 மூட்டைகள் வரையில் கொடுக்கிறது. இவ்விதமே சோளத்தில் சி. எஸ். எச். 1 என்ற ஒரு ரகத்தை வெளியிட்டிருக்கின்றனர். இது ஏக்கராவுக்கு சுமார் 3000 கிலோ அல்லது 38 மூட்டைகள் விளைகிறது, கம்பு தானியத்திலும் எச். பி. 1 என்ற ரகம் ஏக்கருக்கு சுமார் 35 மூட்டைகள் கிடைக்கின்றன. இவ்விதமான மாசூல்கள் நாம் சாதாரணமாக கேட்டும் இருக்கமாட்டோம். ஆனால் மேலே குறிப்பிட்ட பொறுக்கு விதைகளை உபயோகப் படுத்தி, சரியான முறைகளை ஒருங்கே கையாண்டால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மாசூலை அதிகப் படுத்த முடியும்.

இதை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய நிலங்களில் மகசூலை பெருக்க முன்வரும் விவசாயிகளை ஒரு குழுவாகச் சேர்த்து, வேண்டியன செய்ய 'டன்னேஜ் கிளப்' ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய ரீதியில் இது, நமது உணவு அமைச்சர் கனம் சி. சுப்ரமணியம் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. நமது மாகாணத்திலும் இந்த ஸ்தாப னத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

இக் கிளப்பின் குறிக்கோளும் நோக்கங்களும்.

1. நாட்டின் தேவைக்கு போதுமான அளவு உணவு உற்பத்தியைச் செய்ய வழிவகுத்தல்.

2. நவீன சாகுபடி முறைகளைக் கையாளுவதால் அதிக மகசூல் பெறமுடியும் என்ற நோக்கத்தை விவசாயிகளிடம் பரப்புதல்.

3. நவீன உணவு உற்பத்தி முறைகளைப் பற்றிய விவரங்களை சேர்ப்பதற்கும், அவைகளை விவசாயிகளிடையே பரப்புவதற்கும் இது ஒரு மன்றமாக அமைத்தல்.

4. நவீன விவசாய முறைகளைக் கடைபிடிக்க எண்ணம் கொண்ட விவசாயிகளை ஒன்றுகூட்டி, அதிக விளைச்சலைப் பெற வழிவகுக்கவும், இக் கிளப்பின் நோக்கங்களைக் காக்கவும் செய்தல்.

5. இச் சங்கம் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் ஒரு தனிப்பட்ட குழுவாக செயலாற்றுதல்.

6. விவசாயிகளுக்கான விளம்பரம், பயிற்சி கல்வி புகட்டுதல் முதலியவைகளை இக்கிளப்பு எடுத்து நடத்துதல், மேலும் உற்பத்திப் பெருக்கத்திற்காக அரசாங்கத்துடனும், பிற நிர்வாகத்துடனும் ஒத்துழைத்தல்.

7. இவ்வாறு விவசாயிகளுக்கென இந்தியாவிலும், பிற நாடுகளிலும் உள்ள நிர்வாகங்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றுதல்.

8. அதிக உணவு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நவீன அறிவு நுட்பங்களை இச் சங்கத்திலுள்ள அங்கத்தினர்களுக்கும் விவசாய வாலிபர்களுக்கும் அனுபவம் பெறவும், பயிற்சி அளிக்கவும், அரசாங்கத்துடனும் நிறுவனத்துடனும், மற்ற நாடுகளில் உள்ள ஸ்தாபனங்களுடன் ஒத்துழைத்தல்.

9. சங்கத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு அவைகளுக்கு வேண்டிய நிதி உதவித் தொகை, இனும்முதலியவற்றை வசூலித்தல், கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் பொருட்காட்சிகள் முதலிய வற்றை நடத்துதல், பிரதிநிதிகளை அனுப்புதல், அங்கத் தினர்களை சங்கத்தின் சார்பாக பரிவர்த்தனை செய்து கொள்ளுதல்.

---

* 20—12—65 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை.

10. சங்கத்தின் குறிக்கோளை அடைய தேவையான பிற நடவடிக்கைகளை எடுத்தல் ஆகியவையாகும்.

இக் கிளப்பின் மத்திய அலுவலகம் டெல்லியில் இயங்கும்.

மேலே குறிப்பிட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் கொண்டு நெல் பயிருக்கு நம் மாகாணத்தில் மாகாண ரீதியில் ஒரு 'மாகாண டன்னேஜ் கிளப்' ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதற்கு நமது உணவு மந்திரி கனம் ராமையா அவர்கள் தலைவராவார்கள். இம்மாகாண அளவில் ஆரம்பிக்கப்பட்ட டன்னேஜ் கிளப், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு 'மாவட்ட டன்னேஜ் கிளப்' ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் முதன் முதல் செங்கல்பட்டு மாவட்டத்திற்கான டன்னேஜ் கிளப் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் சேரக்கூடிய விவசாயிகள் ஒவ்வொருவரும் தங்கள் சாகுபடி செய்யும் நிலப்பரப்பில் பாதியில் அதாவது எக்கருக்கு குறைந்தது 1½ டன் நெல் விளைவிக்க வேண்டும். இக் குறிக்கோளுடன், அதாவது ஒரு எக்கரில் 1' டன் விளைவிப்பது என்ற முடிவுடன் பல முன்னேற்ற விவசாயிகள் சேர்ந்துள்ளனர். மேலும் இக் கிளப்பில் அதிக விவசாயிகள் அங்கத்தினர்களாக சேரும்படியாகவும் உற்பத்தியைப் பெருக்குமாறும் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தைப் போலவே மற்ற மாவட்டங்களும் அந்தந்த மாவட்ட ரீதியில் ஒரு டன்னேஜ் கிளப் அமைக்க வேண்டுமென்று விழைகிறேன்.

இவ்விதமாக விவசாயிகள் ஒவ்வொருவரும் இந்த கிளப்பில் அங்கத்தினராகி விவசாய உற்பத்தியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த டன்னேஜ் கிளப் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கான வழிவகைகளை விவசாயிகளுக்கு செய்து கொடுக்க அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்.

சிறந்த மலக்கலவை உரம் தயாரித்த பஞ்சாயத்துக்கள்.

மலக்கலவை உரம் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் சிறந்த மலக்கலவை உரம் தயாரிக்கும் பெரிய பஞ்சாயத்துக்களுக்கான போட்டியில், 1964–65-ம் ஆண்டு கீழ்க் கண்ட பஞ்சாயத்துக்கள் வெற்றி பெற்றுள்ளன.

பஞ்சாயத்து பெயர்.	வட்டாரம்.	மாவட்டம்.
கீழ்முதலம்பேடு	கும்பிடிபூண்டி	செங்கல்பட்டு
நல்லூர்	நல்லூர்	தென் ஆற்காடு.
கொண்டசமுத்திரம்	குடியாத்தம்	வட ஆற்காடு.
மாம்பாடி	தாராபுரம்	கோயம்புத்தூர்.
கூடமலை	கங்கவள்ளி	சேலம்.
உக்கடை	அம்மாபேட்டை	தஞ்சாவூர்.
மணக்கால்	லால்குடி	திருச்சிராப்பள்ளி.
பஞ்சம்பட்டி	ஆத்தூர்	மதுரை.
காளகுடி	மானூர்	திருநெல்வேலி.
வில்லம்பட்டி	சிவகாசி	இராமநாதபுரம்.

போட்டியில் வெற்றி பெற்ற பஞ்சாயத்துக்களுக்கு "சப்-ஜூனியர் சுழலும் கேடயங்கள்" வழங்கப்படும்.

அரசினர் தென்னை நாற்றங்காலில் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விபரம்.

கிடைக்கும் இடம்.	கிடைக்கும் காலம்.	கிடைக்கும் எண்ணிக்கை.	ஒரு கன்றின் விலை.
	மார்ச்		காசு
1. ஸ்ரீரங்கம், திருச்சி	,,	2,000	0.90
2. திண்டிவனம், தென் ஆற்காடு	,,	2,000	0·90
3. பட்டுக்கோட்டை, தஞ்சை	,,	12,000	0·90
4. சோழவந்தான், மதுரை	,,	5,000	0·90
5. வடகரை, திருநெல்வேலி	,,	1,000	0·90
6. செங்கோட்டை, திருநெல்வேலி	,,	10,000	0·90

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைச் செய்ய முடியும். இவ்விதம் செய்வதால் அழுகல் நோயைத் தடுக்கவும் முடியும்.

8. மேடைப்பாத்தியாக இருப்பதால் பூமி இருகுவதில்லை ; அதனால் வேரோட்டம் நன்றாக உள்ளது. 45-50 நாட்களிலேயே நாற்றுக்கள் நடுவதற்கு கிடைக்கும்.

9. நன்றாக மக்கின எருவைப் பொடி செய்து ½ அங்குலம் கனத்திற்கு பாத்தியின் மேல் அமைப்பதால் சல்லி வேர்கள் (Root hairs) அதிகமாகவும், ஆணிவேர் ஆழம் செல்லாமலும் உள்ளது. சல்லி வேர்கள் அதிகமிருப்பின் நாற்றுக்களைத் தோட்டத்தில் எடுத்து நடும்போது அதிகம் "பாடுவாசி" (Mortality) ஆவதில்லை. ஆணிவேர் மட்டும் உள்ள நாற்று பிழைப்பது குறைவு.

10. அசுவுணிப் பூச்சி நாற்றங்காலில் விழாமல் காப்பாற்றினாலன்றி எடுத்து நடப்பட்ட செடியில் கட்டுப்படுத்த முடியாது. ஆகையால் நாற்றங்காலைச் சுற்றிலுமுள்ள வரப்புகளையெல்லாம் புல், பூண்டு இல்லாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் ஒரு மாதமான நாற்றங்காலுக்கு தனியாகவோ அல்லது மயில் துத்தக் கலவையுடன் சேர்த்தோ என்டிரின், பாலிடால், பாரமார், மிடாசிஸ்டாக்ஸ் போன்ற பூச்சி நாசினிகளைத் தெளிப்பான் உதவி கொண்டு இலையின் அடிப்பாகத்தில் படும்படி தெளிக்க வேண்டும்.

சென்ற சில ஆண்டுகளாக பவானிசாகர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை விவசாயிகளுக்கென நல்ல முறையில் நாற்றங்காலிட்டு விற்பனை செய்து வருகிறது. பல விவசாயிகள் தங்கள் தேவையைத் தபால் மூலமும், நேரிலும் முன் கூட்டியே அறிவித்து வாங்கிச் செல்லுகின்றனர். விவசாயிகளுக்கு உயர்ந்த புகையிலை நாற்றுக்களைத் தக்க சமயத்தில் தர சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. புகையிலை விவசாயிகள் வரும் ஆண்டிலும் தங்கள் தேவையை முன்கூட்டியே "கண்காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, பவானிசாகர் வட்டாரம், கோயமுத்தூர் மாவட்டம்" என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கரும்பின் தண்டு துளைக்கும் புழுக்களை ஒழிக்க பயிர் பாதுகாப்பு முறைகள்.

பி. எம். ஸ்ரீனிவாசன், பயிர் செடி பாதுகாப்பு அலுவலர், கோவை.

சென்னை மாநிலத்தில் முக்கியமான வாணிபப் பயிராகிய (Commercial crop) கரும்பு பெருவாரியான நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இப் பயிரை பலவிதப் பூச்சிகள் தாக்குகின்றன. அவைகளில் தண்டைத்தாக்கி சேதமேற்படுத்தும் புழுக்களை கட்டுப்படுத்துவது அவசியம்.

இளம் பயிரைத் தாக்கும் குருத்துப்புழு.

அந்து (adult) மஞ்சள் நிறமாய் காணப்படும். முட்டையிலிருந்து வெளித்தோன்றும் சிறு புழு முதலில் இலையைச் சுரண்டி உண்கிறது. பிறகு தண்டில் சிறிய துவாரம் செய்து தண்டுக்குள் சென்று சத்தை உண்டு வளர்கிறது. இவ்வாறு வளரும் புழு முழு வளர்ச்சி அடைவதற்கு முன்பு ஒரு குருத்திலிருந்து மற்றொரு குருத்திற்குச் செல்லும். புழு சாம்பல் வெண்மை நிறம் கொண்டது. அதன்மேல் சிறிய கறுத்த புள்ளிகள் காணப்படும்.

சேதம் : இப்புழு பயிர் முளைத்தவுடனேயே தாக்கத் தொடங்குகிறது. அதாவது இலை மொட்டுகள் பயிர் விடத் தொடங்கியதும் முட்டையிலிருந்து வெளித்தோன்றும் சிறிய புழு தண்டின் பக்கத்தில் துவாரம் செய்து தண்டின் மேல் பாகத்திலோ அல்லது கீழ் பாகத்திலோ சதையை உண்டு ஊடுருவிச் செல்கிறது. இவ்வாறு புழு குருத்தைத் துளைத்து நாசம் செய்து உட் புகுவதினால் மத்தியில் உள்ள குருத்து தண்டின் வளரும் பாகத்திலிருந்து துண்டிக்கப்படுகிறது. அதனால் குருத்து வாடி, உலர்ந்து காய்ந்து பட்டுப்போகிறது.

தடுப்பு முறைகள் :—கரும்புப்பயிரானது செழிப்பாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்து அமோக விளைச்சல் தருவதற்கு உரமும் நீரும் எவ்வளவு அவசியமோ அதேபோல் மேல் குறிப்பிட்ட குருத்தையும் தண்டையும் துளைக்கும் புழுக்களின் தொல்லையைத் தடுக்க பயிர் பாதுகாப்பு முறைகளை முன் எச்சரிக்கையாக அனுசரிப்பது இன்றியமையாததாகும். குருத்துப் புழுவின் சேதத்தைப் பின் வருமாறு தடுக்கலாம்.

1. பயிர் நட்டு நான்கு வாரத்திற்குப் பிறகும், இரண்டு மாதங்களுக்குப் பிறகும், அவைகளின் பக்கத்தில் உள்ள மண்ணை லேசாக கொத்திக் கிளரி விடவேண்டும். இவ்வாறு செய்வதினால் குருத்துப் புழுவின் சேதம் குறைகிறது.

2. அதிக வெப்பம் உள்ள சீதோஷ்ணத்தில் தான் இக் குருத்துப் புழுக்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. அதனால் தண்டுகள் நட்டு 2, 3 தடவைகள் நீர்ப் பாய்ச்சிய பிறகு, காய்ந்த சோலைகளைக் கட்டைகளில் பரப்ப வேண்டும். அவ்வாறு சோலை பரப்புவதனால், பூமியில் உள்ள ஈரம் குறையாமல் காப்பாற்றப் படுகிறது. பயிர் குளிர்ச்சியான சூழ்நிலையில் வளருவதற்கு உதவுகிறது. குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையில் குருத்துப் புழுக்கள் உற்பத்தியாவதில்லை.

3. வீரிய வளர்ச்சி உள்ள கரும்பு ரகங்கள், விரைவில் முதிர்ச்சியடையக்கூடிய ரகங்கள், இவைகளைப் பயிரிடுவதனால் குருத்துப் புழுவின் தாக்குதல் குறையக் கூடும்.

4. பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகித்தும் இப் புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

கரும்புத் துண்டுகளை நடுவதற்கு முன்பு பாத்திகளில் பி. எச். சி. 20 சதம் அல்லது ஹெப்டாக்ளோர் மருந்து ஒரு எக்கருக்கு 5 ராத்தல் தண்ணீரில் கலந்து தெளித்தால் குருத்துப் புழுவின் தாக்குதலைக் கட்டுப் படுத்தமுடியும்.

துண்டுகளை நட்டு ஒரு மாதம் சென்றபின் துவக்கி, மூன்று வாரங்கட்கு ஒரு முறையாக மொத்தம் மூன்று தடவைகள் எண்ட்ரின் 20 சதம் (1 அவுன்ஸ் 6¼ காலன் தண்ணீரில் கலந்து) மருந்தை எக்கருக்கு 80–101 காலன் கலவை தெளித்தால் குருத்துப் புழுக்களை ஒழிக்க முடியும்-

கரும்புத் தண்டு துளைக்கும் புழு.

சேதம் :—இப்புழு இரண்டு கணுக்களுக்கு இடையே உள்ள தண்டைத் துளைத்து உள்ளே உள்ள சத்தை உண்கிறது. இதன் சேதத்தினால் கரும்புப் பாலில் (Juice) தரமும் மிகவும் பாதிக்கப்படுகிறது.

தடுப்பு முறைகள் :—தண்டு துளைக்கும் புழு கரும்புப் பயிரில் கணுக்கள் (Nodes) தோன்றும் தருணத்திலிருந்து அறுவடையாகும்வரை தண்டிற்குள் ஊடுருவிச் சென்று தாக்குவதினால் இவைகளின் தொல்லையைத் தடுப்பது மிகவும் கஷ்டம்.

இதன் சேதத்தைத் தடுப்பதற்கு கீழ் குறிப்பிட்ட முறைகளைக் கையாளலாம்.

1. பூச்சியின் முட்டைகளைச் சேகரித்து அழித்துவிட வேண்டும்.

2. பாதிக்கப்பட்ட செடிகளை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். பயிரையும் பயிர் வளரும் பூமியையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க வேண்டும்.

3. இயற்கையாகவே இப்புழுவின் தொல்லையை எதிர்க்கும் தன்மை வாய்ந்த கரும்பு ரகங்களை (கோ. 449) பயிரிட வேண்டும்.

[28-ம் பக்கம் பார்க்கவும்

IP.G.22.T.

"விவசாய உற்பத்தியை
அதிகரிப்பதற்கான திறவுகோல்
நைட்ரோஜன், பாஸ்பாரிக் அமிலத்துடன்

பொட்டாஷ்"

சேர்ந்த கலப்பு உரங்களே!
என்று தேர்ச்சிபெற்ற விவசாயி கூறுகிறார்.

எனவே உங்கள் உரத்திட்டத்தில்

பொட்டாஷ்

சேர்க்கத் தவறாதீர்கள்

இதனால்
விளைச்சல் பெருகி
அதிகரித்த லாபமும்
கிடைக்கிறது.

பயிர்க்ளுக்கு உரமிடுவது குறித்து இலவச ஆலோசனையும்,
குறிப்புகளும் விவரங்களும் கிடைக்கும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜன்ஸி லிமிடெட்

8/9, தம்புச்செட்டி தெரு, சென்னை-1.



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

''ஜெய் ஜவான், ஜெய் கிசான்'' என்ற வீரமுழக்கத்தை எழுப்பிய திரு. சாஸ்திரி அவர்கள் மறைந்துவிட்டார். நம் நாட்டு மக்கள் என், உலக மக்கள் அனைவருமே சமாதானமாக வாழ வேண்டுமென்பதற்காக தன் உயிரையே அர்ப்பணித்த மாவீரர் அவர். விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கி 'உணவுக்காக அந்நியரை நம்பியிருக்க மாட்டோம்' என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது அவர் அவா! இதனை போர்க்களத்தில் வீரர்கள் வெற்றி கண்டது போல், நம் விவசாயிகள் சாதிக்க முடியும் என பெரிதும் நம்பியவர் அவர். அவர் இன்று மறைந்து விட்டதால், அவருடைய நம்பிக்கைகளை, அவாவை நிறைவேற்ற வேண்டியது நமது பொறுப்பாகும். ஆகவே, விவசாயிகள் அனைவரும் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டு, நாட்டு மக்களுக்கு உணவளிப்போம் என்ற உறுதியைக் கொள்ள வேண்டும். இவ்வுற்பத்திப் போரில், நாம் புதிய முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். புதிய முறைகளைக் கடைபிடிக்க, புதிய முறைகளை நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். உங்களுக்கு விவசாயத்தில் அடிக்கடி புதிய முறைகளை திருச்சி அகில இந்திய வானொலி மூலம் தினமும் மாலை 7-30 முதல் 8 மணி வரை ஒலிபரப்பப்படுகிறது. மன்ற அங்கத்தினர்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விவசாய நிபுணர்களால் விஞ்ஞான விவசாயம் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. ஆகவே, நீங்கள் புதிய முறைகளை திறம்பட கையாள திருச்சி வானொலி ஒலிபரப்பை மாலை 7-30 முதல் 8 வரை கேட்கத் தவறாதீர்கள். சிறப்பான பேச்சு கேட்க வெள்ளிக்கிழமையும், உங்களுக்கு தேவைப்படும் விவசாயக் குறிப்புகளை அறிய திங்கட்கிழமையும், அவசியம் வானொலி கேளுங்கள். மறைந்த பாரதப் பிரதமருக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் அவர் பெரிதும் விழைந்த உணவு உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு பெறுவோமாக.

இப்படிக்கு,
உங்கள் நலனைக் கருதும்
து. கணபதி,
வானொலி விவசாய அலுவலர்,
36-பி, மௌண்ட் ரோட்,
சென்னை-2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை.

தீவிர எள் சாகுபடி

பின்வரும் திருந்திய சாகுபடி முறைகள் எள் மகசூலைப் பெருக்கும்.

1. அடியுரமாக 10 முதல் 15 வண்டி மாட்டு எரு போடவேண்டும். விதைப்பதற்கு முன் இறவைப் பயிருக்கு ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது கலப்பு உரம் எண் 1 நூறு கிலோ போடலாம். மானாவாரிப் பயிருக்கு 37½ கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 50 கிலோ கலப்பு உரம் எண் 1 போடலாம்.

2. பொறுக்கு விதைகளான டி. எம். வி. 1, டி. எம். வி. 2, டி.எம்.வி. 3 போன்ற வகைகளை இடத்துக்கும் பருவத்துக்கும் ஏற்ப தேர்ந்தெடுத்து உபயோகிக்க வேண்டும்.

3. கொர்ரு கலப்பையின் மூலம் வரிசையாக விதைத்தல்.

4. விதை முளைத்தபின் 10-25 நாட்களில் செடிக்குச் செடி மானாவாரிப் பயிரில் ¾ அடியும், இறவைப் பயிரில் 1 அடியும் இடைவெளி விட்டு செடிகளைக் களைத்தல் அவசியம்.

5. 'பிளேடுஹேரோ' கொண்டு வரிசைகளுக்கிடையில் இடையுழவு செய்தல்.

6. இலை, காய் முதலியவற்றைச் சேதப்படுத்தும் புழுவைத் தடுக்க டி.டி.டி. 5 சத மருந்து, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம் அல்லது ½ கிலோ டி.டி.டி. 50 சத மருந்தை 50 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

7. காய்கள் நன்ருக முற்றிய பின், வெடிப்பதற்கு முன் அறுவடை செய்யவேண்டும்.

எள் சாகுபடியை விஸ்தரிக்கவும் பொறுக்கு விதை, ரசாயன உரங்கள் போன்றவைகளை விவசாயிகள் உபயோகிக்கவும் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 'எள் அபிவிருத்தித் திட்டம்' அமுலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் உரம் வாங்க குறுகிய காலக் கடன்கள் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

(1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதி அன்று திரு. ஆர். பட்டாபிராமன், பிரத்தியேக மாவட்ட விவசாய அலுவலர் (எள்) விழுப்புரம், அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்).

மாமரத்தைத் தாக்கும் பூச்சிகளும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

பூவைத் தாக்கும் பூச்சிகள்.—மாமரத்துப் பூச்சிகள் பூங்கொத்துக்களின் சாற்றை உறிஞ்சுவதால் பூக்கள் காய்ந்து உதிர்கின்றன. இப்பூச்சிகள் சிந்தும் 'தேன்துளி போன்ற நீரின் மீது 'கரும்புகை நோய்' தோன்றி மேலும் சேதமேற்படுத்துகிறது. இதைத் தடுக்க பூப்பிடிக்கும் சமயம் ஒரு முறையும், பூ எடுத்து ஒரு மாதம் கழித்து மறுமுறையும் 1 ராத்தல் 50 சத டி.டி.டீ. 50 காலன் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். 50 சத டி.டி.டீ. கலவை தெளித்து பூக்களைப் பின்னும் புழுக்களின் சேதத்தையும் கட்டுப்படுத்தலாம். அசுவுணிப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 அவுன்ஸ் பாரதியான் மருந்தை 12½ காலன் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பழத்தைத் தாக்கும் பூச்சிகள்.—பழத்துக்கு சேதமேற்படுத்தும் பழ ஈக்கள், கருத்த வண்டு போன்றவைகளைக் கட்டுப்படுத்த மாலதியான் அல்லது டி.டி.டீ. 50 சத கலவை மருந்தைத் தெளிக்கவும்.

கிளைகளைத் துளைத்து சேதமேற்படுத்தும் தண்டுதுளைப்பான் புழுக்களைக் கட்டுப்படுத்த கார்பன்-டை-சல்பைடு, குளோரோபாரம், பெட்ரோல் அல்லது நாப்தலின் இவைகளைத் துளைகளில் செலுத்தி, அத்துவாரங்களை களிமண்ணால் மூட வேண்டும்.

இலைகளைத் தின்னும் பூச்சிகள்.—இலைப் புழுக்கள் நுனி இலைகளைச் சேர்த்து உருட்டி, பச்சை பாகத்தை சுரண்டி சேதமேற்படுத்துகிறது. இளங்குருத்துகளுக்கு புழுக்களினால் சேதம் ஏற்படச் செய்வது இலைவண்டு ஆகும். இவைகளைக் கட்டுப்படுத்த 1 ராத்தல் 50 சத பி.எச்.சி. கலவைத் தூளை 13 காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். ஆரம்ப காலங்களில் அதிக சேதமேற்படுத்தும் இலைத் தட்டைப் புழுவைத் தடுக்க 5 சத பி.எச்.சி. தூள் தூவ வேண்டும். இலைகளில் கூடுகட்டி வாழும் சிவப்பு எறும்புகளைக் கட்டுப்படுத்த 10 சத பி.எச்.சி. தூள் தூவவும் அல்லது 50 சத பி.எச்.சி. கலவையைத் தெளிக்கவும். கொம்பு, இலை, காய் முதலியவற்றை சேதப்படுத்தும் செதிள் பூச்சிகள், மாவுப் பூச்சிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த 1 அவுன்ஸ் பாரதியான் மருந்தை 6¼ காலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

(1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் தேதியன்று திரு. எஸ். எம். விட்டல், உதவி பூச்சியல் நிபுணர், திண்டிவனம், அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.)

1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதியன்று "தீவிர விவசாயப் பகுதி ஜில்லாக்களில் அவசர கால உணவு உற்பத்தி திட்டங்கள்" என்ற பொருள்பற்றி திரு. டி. எஸ். பிரான்சிஸ், கூட்டு விவசாய நெறியாளர் அவர்கள் ஆற்றிய உரை முழுவதும் இவ்விதழ் 5-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மார்கழி பட்டத்திற்கு கோ. 7. கோ. 8 கேழ்வரகு ரகங்கள்

மார்கழி முதல் தொடங்கும் கோடை காலப் பட்டத்திற்கு கோ. 7, கோ. 8 ரகங்கள் மிகவும் உகந்தவையாகும். கோ. 7 எல்லா இடங்களிலும், கோ. 8 சிறப்பாக தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது. கோ. 7 நூறு நாட்கள் வயதுடன் எக்கருக்கு 1,200 கிலோ விளைச்சல் கொடுக்கக் கூடியது. 85 நாட்கள் வயதுடைய கோ. 8 ஏக்கருக்கு 1,000 கிலோ விளைச்சல் கொடுக்கும்.

நாற்றங்காலில் கோ. 7 ரகத்தை 22 நாட்கள் வரையும், கோ. 8 ரகத்தை 20 நாட்கள் வரையும் வளரவிட்டபின் பறித்து நடவேண்டும். நாற்று பறிக்க 15 நாட்கள் முன்னர் 3 செண்டுக்கு 2½ கிலோ வீதம் கால்சியம் அமோனியம் நைட்ரேட் தூவ வேண்டும்.

நடவு வயலுக்கு 20 வண்டி தொழு உரமிட்டபின் 50 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும், 15 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷையும் ஏக்கருக்கு அடியுரமாகப் போட வேண்டும். நாற்று நடுவதற்கு முன் 20 கிலோ யூரியா அல்லது 45 கிலோ அமோனியம் சல்பேட் தூவவேண்டும். இவற்றுக்குப் பதில் கலப்பு உரம் எண் 2 ஏக்கருக்கு 150 கிலோ வீதம் நடவில் போடலாம். 5" இடைவெளியில் கோ. 7 ராகி 2 நாற்றுகள் வீதமும், கோ. 8 வகை 3 நாற்றுகள் வீதமும் நடவேண்டும். முதல் களை கொடுத்த பின் ஏக்கருக்கு 20 கிலோ யூரியா அல்லது 45 கிலோ அமோனியம் சல்பேட் மேலுரமாக இடவேண்டும். பின்னர் 3 வாரங்கள் கழித்து இரண்டாம் முறை களை எடுக்க வேண்டும்.

வேரைத் தாக்கும் அசுவுணி, குருத்துப்பூச்சி முதலியவற்றைத் தடுக்க பி.எச்.சி. 50 சதம் தெளிக்க வேண்டும். கருவண்டு, தெள்ளுப்பூச்சி முதலியவற்றைத் தடுக்க பி.எச்.சி. 10 சதம் தூவ வேண்டும். வெட்டுப் புழுவைத் தடுக்க 50 சத டி. டி. டீ. தெளிக்கவேண்டும். கொள்ளை நோய் வராமல் தடுக்க 1 சத போர்டோ கலவை தெளிக்கவேண்டும்.

(1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதியன்று திரு. ஜி. முத்தரசன், மாவட்ட விவசாய அலுவலர், வேலூர் ஆற்றிய உரையின் சுருக்கம்.)

நல்ல கரும்பு விதைக்கரணைகளே நடவுக்கு உகந்தவை!

கரும்பின் விதைக்கரணைகள் செழுமையாகவும், நல்ல வீரியமுள்ளதாகவும், நோய், பூச்சி தாக்காதவையாகவும், கலப்பு இல்லாதவையாகவும், நல்ல முளைப்புச் சக்தி உடையதாகவும் இருக்க வேண்டும். இம்மாதிரியான விதைக் கரணைகளைப் பெறுவதற்காக தனியான நாற்றங்கால் ஏற்படுத்தி 6 முதல் 8 மாத வயது வந்தவுடன் முழுக் கரும்பையும் விதைக்கரணைகளாக வெட்டி நடவிற்கு உபயோகப்படுத்தலாம். வீரியமுள்ள விதைக்கரணைகளைப் பெருக்கம் செய்ய '**தொத்து நோய் விலக்கு**

தனி நாற்றங்கால்கள்' விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்படுகின்றன. இந்த நாற்றங்காலில் 6—8 மாத வயதுள்ள கரும்பை விதைக்கரணைகளாக வெட்டி 'முதன்மை நாற்றங்கால்களுக்கு' விநியோகிக்கப்படுகிறது. மேற்கண்ட நாற்றங்கால்களில் பூச்சி, பூசணங்கள் தாக்காத, கலப்பில்லாத, விதைக்கரணைகள் விவசாய அலுவலர்களின் மேற்பார்வையில் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு "கரும்பு பெருக்க திட்டத்தின்கீழ்" விநியோகிக்கப்படுகிறது.

நல்ல நிலவளமும், நீர்ப்பாசன வசதியும் உள்ள நிலத்தில் நாற்றங்கால் ஏற்படுத்தவேண்டும். நன்கு உழுது 20 வண்டி குப்பை அல்லது கம்போஸ்ட் உரம் இட வேண்டும். 2' 8" இடைவெளியில் பார்கள் போட வேண்டும். கறையான் சேதத்தைத் தவிர்க்க நடவுக்கு முன் ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 10 சதம் பார்களில் தூவி மண்ணுடன் கலக்க வேண்டும். ஏக்கருக்கு 15,000 முப்பரு உள்ள கரணைகள் நடவேண்டும். கரணைகளை அரிடான் அல்லது அகலால் மருந்துக் கரைசலில் முக்கி நடவேண்டும். ஏக்கருக்கு 200 ராத்தல் தழைச்சத்து அளிக்கும் வகையில் அமோனியம் சல்பேட், யூரியா, பிண்ணாக்கு மூலமாகவோ அல்லது கலப்புரமாகவோ கொடுக்க வேண்டும். இந்த உரங்களை இரண்டு சமதவணைகளில் 45, 90-வது நாட்களில் இடவேண்டும். பூச்சி, பூசணங்கள் தாக்காதவாறு பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். 6—8 மாத வயதில் அறுவடை செய்யவேண்டும். ஒரு ஏக்கர் நாற்றங்கால் 10 ஏக்கர் நட விதைக்கரணைகள் கொடுக்கும்.

நாற்றங்கால் ஏற்படுத்தும் பழக்கத்தை விவசாயிகளிடம் உண்டாக்க கரும்பு பெருக்கத் திட்டத்தின்கீழ் பல உதவிகள் அளிக்கப்படுகின்றன.

(1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதியன்று திரு. எம். வேலாயுதம், கரும்பு பெருக்க அலுவலர், திருச்சி, ஆற்றிய உரையின் சுருக்கம்).

நீங்கள் கேட்கப் போகும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்!

(செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7–30-லிருந்து 8 மணி வரை திருச்சி, சென்னை-எ, திருநெல்வேலி, நிலையங்களில் கேட்கலாம்).

4–3–1966	விவசாயத்தில் திட்டமிடுதல்.	திரு. என். ரங்கநாதாச்சாரி, பிரத்தியேக துணை விவசாய நெறியாளர், தஞ்சாவூர்.
8–3–1966	இரட்டிப்பு விளைச்சலுக்கு வீரிய ஒட்டுக்கம்பு.	திரு. எ. ஷண்முகசுந்தரம், சிறுதானிய நிபுணர், கோவை.
11–3–1966	நிரந்தர பலன் தரும் வீட்டுக் காய்கறிகள்.	திரு. எஸ். கமலநாதன், காய்கறி நிபுணர், கோவை.
18–3–1966	குழாய் கிணறு.	திரு. என். சங்கரநாராயண ரெட்டி, கூட்டு விவசாய நெறியாளர், சென்னை,
25–3–1966	மண் பரிசோதனையின் அவசியம்.	டாக்டர் துரைராஜ், மண் இயல் ஆய்வுரையாளர், விவசாயக் கல்லூரி. கோவை.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா, உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்
கிடைக்குமிடம்:—
ராஜா பண்ணைத் தோட்டம்
2, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்,
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி: RAJSEED போன்: 42262

சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பரிசுப் போட்டி

பல்வேறு துறைகளில், இந்தியக் குடிமக்களின் சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பின்வரும் அடிப்படையில் வருடத்திற்கு இருமுறை பரிசுப் போட்டி நடைபெறும்.

1. சுயமான சாதனம் அல்லது செய்முறை கண்டுபிடிப்புக்கு;
2. தற்போது உபயோகத்திலுள்ள சாதனம் அல்லது செய்முறையின் உபயோகத்தை அதிகப்படுத்தும் அல்லது விலையைக் குறைவுபடுத்தும் அல்லது குறைந்த விலையில் உபயோகத்தை அதிகப்படுத்தும் கண்டுபிடிப்புக்கு;
3. இறக்குமதி செய்யப்பட்ட சாதனம் அல்லது செய்முறைக்கு மாற்று கண்டுபிடிப்புக்கு.

விவசாயம், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் உள்ள தொழிற்சாலைகள், ஆய்வுக்கூடங்கள், சோதனைச் சாலைகள் முதலியவற்றில் பணியாற்றுபவர்கள், தனிப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களோ தங்களுடைய கண்டுபிடிப்புகளுக்கு பரிசளிக்க விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

பரிசுப் போட்டி பற்றிய விதிமுறைகளும் விண்ணப்பங்களும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்:—

N. BHAVANI,
DIRECTOR,
INVENTIONS PROMOTION BOARD,
C-518, DEFENCE COLONY,
NEW DELHI-3.

தென்னையின் முக்கிய விரோதிகளும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

(ஆர். சிவகாமி & எஸ். விஜயராகவன், பூச்சி ஆராய்ச்சிப் பிரிவு, விவசாயக் கல்லூரி, கோவை.)

அன்றாட வாழ்வில் மனிதனுக்கு பலவகையிலும் உபயோகப்படும் தென்னையை நூற்றுக்கணக்கான பூச்சிகள் தாக்கி, மரத்தின் பல்வேறு பாகங்களையும் பலவீனமடையச் செய்கின்றன. தென்னை விரோதிகளின் தொல்லையை ஒழித்து அதிக மகசூல் பெறவும் நல்ல லாபம் பெறவும் கீழ்க்காணும் தடுப்பு முறைகளைக் கையாளுங்கள்.

1. தென்னைக் கருவண்டு (Rhinoceros beetle).

இவ்வண்டு தென்னை பயிரிடப்படும் எல்லா இடங்களிலும் பெருந்தொல்லையாக உள்ளது. எல்லா காலங்களிலும் இவ்வண்டு காணப்பட்டாலும், மழைகாலங்களில் தான் இவை அதிகம்.



சேதம்.—கருவண்டு மர உச்சியில் தென்னை மட்டைகளுக்கிடையே உள்ள சந்துகளிலிருக்கும். வண்டுகள் குருத்து இலைகளைத் தின்று, நார்ப் பொருளிலிருக்கும் சாற்றை உறிஞ்சி இலைகளை வறண்ட பொடியாக ஒதுக்கின்றன. குருத்து இலைகளில் வண்டு செய்யும் துளைகள், இலைகள் விரிந்தபின் பெரிதாகத் தெரிகின்றன. தென்னைமரம் கருவண்டுகளால் மீண்டும் மீண்டும் பாதிக்கப்பட்டால் பலமிழந்து வளர்ச்சி குன்றிவிடுகின்றது. தென்னம் பாளைகளும் சில சமயம் தாக்கப்படுவதால், தேங்காய் காய்ப்பு பெரிதும் பாதிக்கப்படுகிறது. தென்னம் பிள்ளைகளில் குருத்திலைகள் முளை கிளம்பும்போது துளைக்கப்பட்டால் கன்றே கொல்லப்படலாம்.

இவ்வண்டுகள் நீண்டதூரம் பறந்துசெல்லக்கூடியவை தலையின் மேற்புறத்திலிருந்து மேல்நோக்கி பின்னால் வளைந்திருக்கும் கொம்பு ஒன்று ஆண் வண்டில் காணப்படும். தாய்வண்டுகள் எருக்குழிகளிலும், அழுகிய பொருட்குவியல்களிலும் முட்டைகளிடுகின்றன. சுமார் 8 முதல் 10 நாட்களில் முட்டையிலிருந்து வெளிரிய மஞ்சள் நிறப் புழுக்கள் வெளிவரும். இவற்றிற்கு எருக்குழியிலுள்ள மக்கிய உரமும், அழுகிய பொருட்களுமே ஆகாரமாகிறது. புழுக்கள் நான்கைந்து மாதங்களில் சுமார் 4" நீள தடித்த புழுக்களாகிவிடுகின்றன. இப்புழு சாதாரணமாக உட்புறம் வளைந்திருக்கும். முழு வளர்ச்சி பெற்ற புழு மண்கூட்டிற்குள் கூட்டுப் புழுவாக மாறி 20 நாட்கள் முதல் 2 மாதங்கள்வரை இருந்த பின்னர் வண்டாக வெளிவரும். இந்த வண்டு தென்னை மரத்தை மட்டுமின்றி, சில சமயங்களில் பனை மரத்தையும், பேரீச்சையையும் கூடத் தாக்குகிறது.

தடுப்பு முறை.—(1) முட்களுடைய இரும்புக் கொக்கிகளால் வண்டுகளைக் குத்திப் பிடித்து அழிக்கவேண்டும். (2) வண்டுகளால் துளைக்கப்பட்ட ஓட்டைகளில் க்ளோர்டேன் (Chlordane) 5 சத தூளையோ அல்லது பி.எச்.சி. (B.H.C) 10 சத தூளையோ சமவிகித மணலுடன் கலந்து தூவவேண்டும். இதை மூன்று மாதங்களுக்கொருமுறை செய்தால் வண்டின் சேதத்தை ஓரளவுக்குத் தடுக்கலாம். (3) வண்டின் முட்டைப் பருவத்தையும், புழுக்களையும் அழிக்க எருக்குழிகளுக்கு 0.1 சத பி.எச்.சி. மருந்தைத் (1 ராத்தல் 50 சத நனைதூள் 6½ காலன் தண்ணீரில் கலக்க வேண்டும்) தெளிக்கவேண்டும்.

2. கருந்தலைப்புழு (Black headed caterpillar.)

கருந்தலைப் புழுவினால் ஏற்படும் சேதம் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் வருட முழுவதும் காணப்படுகிறது. மழை அதிகமில்லாதபோதும், வெய்யில் காலங்களிலும் அதாவது பிப்ரவரியிலிருந்து ஜூன் மாதம் வரை சேதம் அதிகமாக இருக்கும்.

சேதம்.— புழுக்கள் ஓலையிலுள்ள பசுமையான பாகத்தைச் சுரண்டித் தின்கின்றன. இவை நூலினால் இழைகளைப் பின்னி அதனுள்ளிருந்துக் கொண்டே சேத

மேற்படுத்துகின்றன. அதிக சேதத்தினால் ஓலைகளே காய்ந்துபோகின்றன.

சாம்பல் நிற இறகுகளுடைய சிறிய தாய்ப் பூச்சி ஓலைகளின் உட்பாகத்தில் முட்டைகளிடுகிறது. முட்டையிலிருந்து புழுக்கள் சுமார் 5 நாட்களில் வெளி வரும். இவை ஓலையிலுள்ள பச்சை சத்தைச் சுரண்டித் தின்னும். முழுதும் வளர்ந்த புழுக்கள் அழுக்கடைந்த வெண்மைநிறஉடலுடனும், கருமையான தலையுடனுமிருக் கும். புழுக்கள் ஓலையின் பச்சை சத்தைத் தின்று கொண்டு போகப் போக தனக்கென்று நூலாலும், கழிவுப் பொருளாலும் ஒரு நீண்ட குழல் போன்ற பகுதியை (Gallery) உண்டாக்கிக்கொள்ளும். புழுக்கள் அதிகமாக இருக்கும் ஓலைகள் பச்சை சத்தின்றி வெளுத்து காகிதம் போல் காணப்படும். புழுக்கள் முழுவளர்ச்சியடைய 5 முதல் 8 வாரங்களாகும். இதன்பின் ஒவ்வொரு புழுவும் சிவப்பு நிற கூட்டுப்புழுவாக மாறி அந்த நிலையி லேயே 2 முதல் 3 வாரங்களிருக்கும். பின்னர் இதி லிருந்து சிறிய சாம்பல் நிற சிறகுகளுடைய பூச்சிகள் வெளிவரும்,



தடுப்பு முறை.—(1) பாதிக்கப்பட்ட தென்னை ஓலைகளின் மீது 0.2 சத டி.டி.டி. கலவையைத் (1 ராத்தல் 50 சத நனைதூளை 25 காலன் தண்ணீரில் கலக்க வேண்டும்) தெளிக்கவேண்டும். அருகாமையிலுள்ள பாதிக்கப்படாத தென்னை மரங்களுக்கும் பூச்சி பரவாமலிருக்க இம்மருந்தைத் தெளிக்கலாம். (2) கருந்தலைப் புழுவின் பல்வேறு பருவங்களைத் தாக்கி நாசம் செய்யும் விரோதிப் பூச்சிகளாகிய ஒட்டுண்ணிகளை (Parasites) உபயோகித்தும் இதன் நாசத்தை ஓரளவு தடுக்கலாம். புழுக்களை அழிக்க பெரிசியரோலா நிபேன்டைடிஸ் (Perisierola nephantidis), எலாஸ்மஸ் நிபேன்டைடிஸ் (Elasmus nephantidis) என்ற பூச்சிகளையும், கூட்டுப் புழுவைத் தாக்க ட்ரைக்கோஸ்பைலஸ் ப்யூபிவோரா (Trichospilus pupivora) போன்ற பூச்சிகளையும் உபயோகிக்கலாம்.

3. சிவப்புக் கூன்வண்டு (Redpalm weevil.)

இவ்வண்டுகள் வருட முழுதும் காணப்படுகின்றன.

சேதம்.—நன்றாக வளர்ந்து வரும் மரங்களில் இவ் வண்டு தோன்றி குருத்து, தண்டு முதலியவைகளின் மிருதுவான பாகங்களை அரித்துவிடுவதால் மரங்கள் நன்றாக வளர வழியில்லாமல் போகிறது. வண்டுகளால் தாக்கப்பட்ட மரங்களில் சிறு சிறு துவாரங்கள் தோன்றி அவைகளின் வழியாக ஒருவித கருஞ்சிவப்பு நிற நீர் கசியும். பின் புழுக்களால் அரிக்கப்பட்ட நார்கள் வெளித் தள்ளப்படும். அதிகம் துளைக்கப்பட்ட மரங்களின் குருத்து கள் காற்றின் வேகத்தில் ஒடிந்துவிடும். இவ்வண்டின் சேதம் பொதுவாக கருவண்டு, தீ, இடி முதலியவற்றால் பாதிக்கப்பட்டு பலவீனப்பட்ட மரங்களிலேயே ஏற்படும்.





வண்டுகள் சிவப்பாயும், நீண்ட மூக்குடனு மிருக்கும். தாய்வண்டு வெண்மை நிற முட்டைகளை மரத் துவாரங்களில் இடுகிறது. இதிலிருந்து பொரிந்து வெளி வரும் புழுக்கள் சிவப்புத் தலையும், மஞ்சல்நிற உடலும் உள்ளவையாய் இருக்கும். வண்டுகள் முட்டையிலிருந்து முழுவண்டு நிலையடைய சராசரியாக 82 நாட்கள் ஆகிறது.

தடுப்பு முறை.—(1) பைரக்கோன் (Pyracon.E) என்ற மருந்தின் ஒரு பாகத்தை 100 பாகம் நீருடன் கலந்து புனல் (funnel) மூலம் துளைக்கப்பட்ட மரத் துவாரத்தி னுள் செலுத்தவேண்டும். நல்ல வளர்ச்சியடைந்த ஒரு தென்னை மரத்திற்கு சுமார் 1,000 முதல் 1,500 சி. சி. வரை இந்த 1 சத பைரக்கோன் மருந்தை உட்செலுத்த லாம். மருந்தின் அளவு சேதத்தின் அளவைப் பொறுத் திருக்கவேண்டும். மருந்து செலுத்தப்படும் ஒரு துவாரம்

தவிர மற்றெல்லா துவாரங்களையும் சிமெண்டு அல்லது களிமண்ணால் அடைத்துவிடவேண்டும். மருந்து செலுத்திய பின் அந்த துவாரத்தையும் அடைத்துவிடவேண்டும். (2) பெருவாரியாகப் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளில் 10 சத பி.எச்.சி. அல்லது 5 சத க்ளோர்டேன் பொடியை சமஅளவு மணலுடன் கலந்து ஓலைகள் மரத்திலிருந்து பிரிந்துவரும் கணுக்களில் தூவுவதால் இளந்தென்னைகளை இவ்வண்டின் சேதத்திலிருந்து காப்பாற்றலாம். (3) பாதிக்கப்பட்ட தண்டின் பாகங்களைச் செதுக்கி கசிவு நீரை முழுதும் அகற்றியபின் பாராடைக்ளோரோ பெனசீன் கிரிஸ்டல்ஸ் (Paradichloro benzene crystals) என்ற உப்புப் போன்ற மருந்தை மரத் துவாரத்தில் ஒரு மரத்திற்கு 2 முதல் 4 அவுன்சு வரை போட்டு, துவாரத்தை அடைத்துவிட வேண்டும். இம் மருந்திலிருந்து வெளிவரும் ஆவி பூச்சிகளை சுவாசிக்க முடியாமல் செய்து அழிக்கிறது.

4. இலைப்புழுக்கள் (Leaf Caterpillars.)

இலைப்புழுக்கள் பச்சை நிறமாகவும் தட்டையாகவும் இருக்கும். இவற்றின் உடலின்மீது விஷ ரோமங்கள் இருப்பதால் இவை மேலே பட்டாலே எரிச்சல் ஏற்படும். இப்புழுக்கள் மாநில முழுதுமிருந்தாலும் உஷ்ண காலங்களில்தான் அதிகமிருக்கும்.

சேதம்.—புழுக்கள் பசுமையான ஓலையின் பாகத்தைச் சுரண்டித் தின்கின்றன. நன்கு வளர்ச்சியடைந்த புழுக்கள் முழு ஓலையையே தின்று விடுகின்றன. இதனால் சில சமயம் ஓலைக்குச்சிகள் மட்டுமே மிஞ்சுகின்றன.



சேதமடைந்த ஓலை.

தாய்ப்பூச்சிகள் சிறிய வெண்மையான முட்டைகளைத் தனித்தனியாக ஓலைகளின் அடிப்பாகத்தில் இடுகின்றன. முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலையைத் தின்று முழுதும் வளர்ந்து கூட்டுப் புழுவாக மாறுகின்றன. கூட்டுப்புழு மண்நிறமாக சிறிய உருண்டையாக இருக்கும். இதிலிருந்து அந்துப் பூச்சிகள் வெளிவரும்.

தடுப்பு முறை.— (1) பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி எரித்துவிடவேண்டும். (2) பி.எச்.சி. 0.1 சத மருந்தை (1 ராத்தல் 50 சத நனைதூளை 6½ காலன் நீரில் கலக்க வேண்டும்) ஒரு மரத்திற்கு சுமார் 1 காலன் வரை தெளிக்கலாம்.

5. சிலாம்புப் பூச்சி (Scales)

இப்பூச்சிகள் வட்டமாக பளிச்சென்ற மஞ்சள்நிறத்தில் தட்டையாக ஓலைகள்மீது ஒட்டிக்கொண்டிருக்கும். இவை எப்பொழுதும் காணப்பட்டாலும், உஷ்ண காலங்களிலேயே அதிகமாகத் தென்படும்.

சேதம்.—ஓலைகளின் பின்புறத்தில் இவை அதிகமாக தோன்றி இலைகளின் சாற்றை உறிஞ்சி விடுவதால், பாதிக்கப்பட்ட ஓலைகள் மஞ்சள் நிறமாக மாறி பின்னர் காய்ந்து போகின்றன.

தடுப்பு முறை.— பாரத்தியான் (Folidol) 0.05 சத கலவையை (1 அவுன்சு மருந்தை 6¼ காலன் தண்ணீரில் கலக்கவேண்டும்). ஒரு மரத்திற்கு சுமார் 1 காலன் வீதம் தெளிக்கவேண்டும்.

6. மாவுப்பூச்சி (Mealy bugs)

இவை பஞ்சு போன்ற வெண்மையான சிறிய பூச்சிகள் ஓலைகளின்மீது ஒட்டிக்கொண்டிருக்கும். மாப்பூச்சிகளும் சில சமயம் குருத்துகளைப் பாதித்து மரத்தின் பலத்தைப் பாதிக்கும். இவற்றைத் தடுக்க பாரத்தியான் 0.05 சத கலவையை உபயோகிக்கலாம்.

7. கண்ணாடிப்பூச்சி (Lacewing bugs)

இவைகளுக்கு வெண்மையான கண்ணாடி போன்ற இறக்கைகளிருக்கும். முழுதும் வளராத பூச்சிகள் மண் நிறமாக இறகுகளின்றி இருக்கும். இப்பூச்சிகள் வருட முழுதும் எல்லா மாவட்டங்களிலுமிருக்கும்.

சேதம்.—பூச்சிகள் ஓலையின் பின்புறமிருந்துக் கொண்டு சாற்றை உறிஞ்சிவிடுவதால் ஓலைகள் பழுப்பு தட்டி காய்ந்து விடும்.

தடுப்பு முறை.—பி.எச்.சி. 0.05 சத மருந்து கலவையை (1 ராத்தல் 50 சத நனைதூளை 13 காலன் தண்ணீரில் கலக்கவேண்டும்). மரம் ஒன்றிற்கு 1 காலன் வீதம் தெளிக்கலாம்.

8. கரையான் (Termites)

கரையான்கள் எப்பொழுதும், எல்லாவிடங்களிலும் சேதமேற்படுத்துகின்றன.

சேதம்.—இவை தென்னங்கன்றுகளைச் சுற்றி புற்றிலிருந்துகொண்டு ஓலைகளையும், வளரும் குருத்தையும் தின்று வளர்ச்சியைத் தடுத்துவிடுகிறது. அதிக சேதமேற்படுத்தி சில சமயம் தென்னங்கன்றுகளையே பிழைக்காமல் செய்துவிடுகிறது.

தடுப்பு முறை.—ஹெப்டாக்ளோர் (Heptachlor) 3 சதப் பொடியை கரையான் பற்றுக்களைச் சுற்றித் தோண்டி தூவவேண்டும். தென்னை நெற்றுக்களைச் சுற்றி சிறிது தோண்டி இம்மருந்துப் பொடியைத் தூவுவதால் கரையான்கள் நெற்றுக்களையும் பாதிக்காமல் செய்ய லாம்.

9. எலிகள் (Rats)

சிலசமயம் எலிகளாலும் தென்னைக்குத் தொல்லை ஏற்படுவதுண்டு. இவ்வெலிகள் இளஞ்சிவப்பு நிறமாக மஞ்சள்நிற கால்களுடனிருக்கும். எலிகள் மரங்களின் மீது ஏறி இளநதேங்காய்களைக் கடித்து இளநீரையும் குடித்து, அதிலுள்ள தேங்காயையும் தின்றுவிடுகின்றன.

தடுப்பு முறை.—(1) எலிகள் மரங்களின்மீது ஏறு வதைத் தடுக்க தகரத் தகடுகளை மரத்தண்டுகளைச் சுற்றி வைக்கவேண்டும். (2) தென்னநதோப்பில் ஆங்காங்கு வறுத்த பொறி, கருவாடு, தேங்காய் அல்லது வெங்கா யம் ஆகிய உணவுப்பொருள் 19 பாகத்துடன் 1 பாகம் ஜிங்க் பாஸ்பைட் (Zinc phosphide) என்ற மருந்தைக் கலக்கி வைக்கவேண்டும். இம்மருந்து கொடிய விஷ முள்ளதாகையால் இதைக் கையால் தொடக்கூடாது. மேலும் குழந்தைகள், கால்நடைகள் உள்ள இடங்களில் இம்மருந்தைப் பாதுகாப்பின்றி வைக்கக்கூடாது.

கரும்பு விளைச்சல் போட்டி

1965-ம் ஆண்டு தனிப்பட்சத்தில் புகளூர் சர்க்கரை ஆலைப் பகுதியில் கருமபு விளைச்சல போட்டியில் கீழே குறிப்பிட்டவர்கள் மாவட்டப் பரிசு, வட்டப் பரிசுகள் பெற் றுள்ளனர்.

வரிசை எண். (1)	பரிசு பெற்றவர்களின் பெயர் மற்றும் முகவரி. (2)	நடவு செய்யப்பட்ட கிராமத்தின் பெயர். (3)	கரும்பின் ரகம் நடவா அல்லது கட்டையா? (4)	ஏகருக்கு பதிவு செய்தது. (ஏக்கருக்கு டன்னில்.) (5)
1. மாவட்டப் பரிசு.				
		திருக்காடுதுறை		
	திரு. அம்மையப்பன், கருப்பண்ண கவுண்டர் மகன், திருக்காடுதுறை.	,,	கோ. 419 கட்டை.	74·226
2. வட்டப் பரிசு.				
(அ) கரூர் வட்டம்.				
1.	திரு கருட்பக் கவுண்டர் வீரப்பகவுண்டர் மகன், திருக்காடுதுறை.	,,	கோ. 419 கட்டை	73·842
(ஆ) ஈரோடு வட்டம்.				
		சென்னசமுத்திரம்		
2.	திரு. பழனிச்சாமி, வேலப்ப கவுண்டர், மகன். சங்லைப்புதூர்.	,,	கோ. 419 கட்டை.	61·926

தாளடி மகசூலைப் பாதுகாக்க விசேஷ நடவடிக்கைகள்

தாளடி மகசூலுக்கு முடிந்தஅளவு உதவும் வகையில் 1966 பிப்ரவரி 10 முதல் 6 அல்லது 7 நாட்களுக்கு தினமும் 3000 கியூ செக்குகள் தண்ணீரை மேட்டூர் தேக்கத்திலிருந்து சப்ளை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தண்ணீர் வசதியை முறையாகவும், மிகவும் சிக்கனமாகவும் பயன்டுத்திக் கொள்ளவேண்டும். கோடைகாலப் பயிர்களை விளைவிக்கப் பாசன வாய்ப்பு இல்லாததால் திருச்சி, சேலம் மாவட்டங்களில் காவிரி கால்வாய்ப் பகுதிக்குட்பட்ட விவசாயிகள் கோடைகாலப் பயிர்களுக்கு இந்தப் பற்றுக்குறையா தண்ணீரைப் பயன் படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தஞ்சாவூர், திருச்சி, சேலம், தென்னாற்காடு மாவட்டங் களில் காவிரிக் கால்வாய்கள் மூலம் கோடைக்காலப் பாசன வசதிக்காக மேட்டூர் தேக்கத்திலிருந்து தண்ணீர் சப்ளை செய்ய இல்லாத நிலை உள்ளது. எனவே இந்தப் பகுதிகளில் விவசாயிகள் கோடைக்காலப் பயிர்களை விளை விக்காமல் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த ஆண்டு கோடையில் வழககத்தைவிடத் தண்ணீர் வசதி குறைவாக இருக்குமாதலால், தற்போதுள்ள கரும்பு, வாழை போன்ற பயிர்களுக்கு தண்ணீர் நிலைமையை பொறுத்துத்தான் பாசன வசதி அளிக்கப் படும் என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த விரும்பு கிறது. எனவே, முடிந்த இடங்களிலெல்லாம் கரும்பு, வாழை பயிர்களுக்கான பாசனத்திற்காக கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள் ஏற்படுத்து வதற்கான தகுந்த நடவடிக்கைகளை விவசாயிகள் மேற் கொள்ளும்படி அரசாங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

4. விரைவில் முற்றும் ரகங்களையும், வீரியத்துடன் துரிதமாக வளரக்கூடிய ரகங்களையும் பயிர் செய்வதால் இதை ஒருவாறு கட்டுப்படுத்தலாம்.

5. லிஃஸோ பேகா டயட்ரே என்னும் விரோதிப் பூச்சியை உற்பத்தி செய்து, கரும்புத் தோட்டங்களில் பரவலாக விட்டு எந்த அளவில தண்டுப் பூச்சிகளை கட்டுபபடுத்துகின்றன என்று ஆராய்ந்து வருகிறார்கள்.

3. நுனிக்குருத்துப் புழு: இதனால் ஏற்படும் சேதம் கரும்புப் பயிரின் 2-3 மாதங்களில் தொடங்கி அறுவடை யாகும் வரை நீடிக்கிறது.

தடுப்பு முறைகள் :—

(1) முட்டை கூட்டங்களைசேகரித்துஅழிக்க வேண்டும்.

(2) தாககப்பட்ட குருத்துக்களை புழுக்களுடன் வெட்டி அகற்றி ஒழிக்க வேண்டும.

(3) டிரைக்ககாகிரமபோன்ற கட்டுப்படுத்தலாம்விரோ திப் பூச்சிகளையும் அதிகமாக விட்டு கட்டுபபடுத்தலாம்.

(4) துரிதமாக வளரக்கூடிய கரும்பு ரகங்களைப் பயி ரிடவேண்டும்.

(5) காய்ந்த இலைகளை அப்புறப்படுத்தி அழிக்க வேண் டும். ஏனென்றால் அவைகளிலதான் நுனிக் குருத்துப் பூச்சியின் கூட்டுப் புழுகள் காணபபடும். அவைகளை அழித்தால் அநதுப் பருவம் எய்திய பூச்சிகள் உற்பத்தி யாவது தடைபபடுகிறது. அதனால் இதன இனப்பெருககம் ஒழிக்கப்படுகிறது. ஆகவே பயிர் இதன தாககுதலி லிருந்து தப்ப முடிகிறது.

1965-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

சென்னை மாநிலத்தில் முதல் ஒன்பது நாட்களில் பரவலான மழை பெய்தது. இதைத் தொடர்ந்து இரண்டு நாட்களில் பரவலான தூறலும், அடுத்த இரண்டு நாட்களில் ஆங்காங்கு மாத்திரம் தூறலும் ஏற்பட்டது. இதையடுத்த மூன்று நாட்களில் வெகுவாக வரட்சியே நிலவியது. பின் தொடர்ந்த ஒன்பது நாட்களில் 17, 18, 21, 22-ம் தேதிகளில் மாத்திரம் இங்குமங்கும் தூரல் இருந்தது. மற்ற நாட்கள் வரட்சியாகவே இருந்தன. 26-ம் தேதி சென்னை மாநிலத்தின் தென்பகுதியில் மட்டும் ஒன்று இரண்டு இடங்களில் தூறலும், 27-ம் தேதி கொஞ்சம் அதிக இடங்களில் தூறலும், 28, 29 தேதிகளில் சில இடங்களில் மாத்திரம் தூறலும் இருந்தது. மற்றபடி மாதம் இறுதிவரை வரட்சியே நிலவியது.

பகல் உஷ்ணம் ஒரே நிதானமாகவும், இரவு உஷ்ணம் சற்று ஊசல் உள்ளதாகவும் காணப்பட்டது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்.—இம்மாதம் செங்கல்பட்டு மாவட்டத்தில் நல்ல மழை பெய்தது. மாத நடுவில் நல்ல வெயில் இருந்தமையால் முதலில் விதைத்த சம்பா நெல்லை அறுவடை செய்ய வசதியாக இருந்தது.

வடஆற்காடு மாவட்டத்திலும் நல்ல மழை இருந்தது. இதனால் சம்பா நெல், சோளம், கரும்பு, துவரை முதலிய பயிர்கள் நன்மையடைந்தன. நவரை நெல் நாற்று விடுவதற்கும், தோட்ட ராகி, வேர்க்கடலை விதைப்புக்கு பூமி தயாரிப்பதற்கும், ராகி நாற்று விடுவதற்கும் இம்மழை உபயோகமாக இருந்தது.

தென்னாற்காடு மாவட்டமும் நல்ல மழையை அடைந்தது நெல் பயிருக்கு இது மிகவும் நன்மை செய்தது. அத்துடன் தோட்ட வேர்க்கடலை, காட்டு எள் இவற்றின் விதைப்பும் நடைபெற்றது. ஆனால் சோளம், வேர்க்கடலை இவற்றின் அறுவடை கனத்த மழையால் பாதிக்கப்பட்டது. கரும்பு, மர வள்ளிக் கிழங்கு, மஞ்சள் முதலியன நன்றாக வளர்ச்சியடைந்தன. முதல் விதைப்பு சம்பா அறுவடையாகி வருகிறது. குறிப்பிடத்தக்க அளவில் பூச்சிகளோ, வியாதிகளோ தோன்றவில்லை.

தஞ்சை மாவட்டத்திலும் கனத்த மழை இருந்தது. அதனால் சம்பா, தாளடி நெல் நல்ல பலனை அடைந்தது. ஆனால் இம்மழை ராகி நாற்றங்காலையும், புதியதாக நடவான ராகியையும் பாதித்தது. காய்கறிப் பயிர்களும் தூரமுகலால் பாதிக்கப்பட்டன. இலைப் புள்ளி நோய் சம்பா நெல்லைக் கடுமையாக பாதித்தது. இது தாளடிப் பயிருக்கும் பரவியிருந்தது. தடுப்பு முறைகள் செவ்வனே கையாளப்பட்டு இதன் கொடுமை குறைந்தது.

திருச்சி மாவட்டமும் நல்ல மழையை அடைந்தது. மல்லி, எள், கோடை வேர்க்கடலை, P 216 F பருத்தி இவற்றை விதைக்க முன் ஏற்பாடுகள் சரிவர நடந்தன. ஆனால் முன் பருவத்தில் விதைத்த சோளம், வேர்க்கடலை, கம்பு முதலிய அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்கள் மழையால் பாதிக்கப்பட்டன. இம்மழை சம்பா நெல், கரும்பு, வாழை, MCU1 பருத்தி, மஞ்சள், மிளகாய், புகையிலை முதலிய பயிர்களுக்கு உபயோகமாக இருந்தது. நெல்லில் தத்துப் பூச்சிகளும், கொள்ளை நோயும் காணப்படவே, தடுப்பு முறைகள் கையாளப்பட்டன.

மதுரை மாவட்டத்தில், போடிநாயக்கனூர், உத்தமபாளையம் பகுதிகளில் மழை போதாததால் பருத்தியும் நெல்லும் பாதிக்கப்பட்டன. ஆனால் மழையால் அறுவடைக்கு இருந்த வேர்க்கடலையில் காய்கள் வேர்விட ஆரம்பித்தன. நெல் நாற்று விடப்பட்டது. இலைப் புள்ளி நோய், கொள்ளை நோய் முதலியன நெற்பயிரிலும், முட்டைக்கோஸில் இலைப் புழுக்களும், துவரையில் காய்ப் புழுக்களும் தென்பட்டன. தக்க முறைகளைக்கொண்டு இவை தவிர்க்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டத்தில பெய்த மழை மானவாரிப் பருத்திக்கு நன்மையளித்தது. ஆனால் வேர்க்கடலை அறுவடை பாதிக்கப்பட்டது. இம்மாதச் சிறுதானியங்களில் பல அறுவடையாயின. மகசூலும் சராசரியளவில் இருந்தது. கீழ்க்கரை யோரத்தில் மழை மிகுதியால் தண்ணீரை பயிர்களில் வடிக்கவேண்டி வந்தது. கீழ்க்கரையோர ஏரிகளில் போதிய நீர் நிரம்பியது. மேற் பகுதிகளிலோ இன்னம் ஏரிகளில் போதிய நீர் வரவில்லை. வெகுவாக பூச்சிகளோ, வியாதிகளோ காணப்படவில்லை.

நெல்லை மாவட்டத்தில் நல்ல மழையின் காரணமாக நெல் விதைப்பு, நெல் நடவு முதலியன செவ்வனே நடைபெற்றன. ஏற்கனவே பூமியில் உள்ள நெல், சோளம், நிலக்கடலை போன்ற பயிர்களும் நன்மையுற்றன. நெல், சோளம் களையெடுப்பு மழையால் சுலபமாயிற்று. தென்காசியை யொட்டின பகுதிகளில் அதிக மழை ஈரத்தின் காரணமாக சிறிதளவில் பூச்சிகளும், வியாதிகளும் தென்பட்டன. இவை உடனே தகுந்தபடி தடுக்கப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, தாலூக்காவின் சில பகுதிகள் தவிர மற்றய பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. பெய்த மழை சோளம், நெல், பருத்தி, கொள் முதலியவற்றுக்கு நன்மையாக இருந்தது. ஆனால் ராகி நடவு கொஞ்சம் தடைபட்டது. போன மாதம் முதற்கொண்டு ஆரம்பமான MCU1 பருத்தி விதைப்பு இந்த மாதத்தில் முடிவு

பெற்றது. தத்துப் பூச்சிகளும், திரிப்ஸ் பூச்சிகளும் பருத்தியில் காணப்பட்டன. ஆமணக்கில் கூன் புழுக்களும், மாவில் தத்துப் பூச்சிகளும் காணப்பட்டன. இவற்றை தகுந்தபடி மருந்து அடித்துத் தவிர்க்கப் பட்டது.

கோவை மாவட்டத்தில் இம்மாதம் நல்ல மழை இருந்தது. கரும்பு, நெல், கருங்கண்ணிப் பருத்தி, வாழை, மிளகாய், போன்ற பயிர்கள் இதனால் நலனுற்றன. ஆனால் மானவாரிச் சோளம், முன்பட்டத் தோட்டக்கால் பருத்தி, காட்டுக்கம்பு, வேர்க்கடலை, போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டன. காளிங்கராயன் அணையின் கீழுள்ள நெல்லில் குருத்துப் பூச்சியும், தூராமுகல் நோயும் பெருமளவில் சேதம் விளைத்தன. அவற்றைத் தடுக்க தீவிர முயற்சி எடுக்கப்பட்டது. இதைத் தவிர தத்துப் பூச்சிகள், நாவாய்ப் பூச்சிகள் நெல் பருத்தி இவற்றிலும், தென்னையில் கருந்தலைப் புழுவும், தக்காளியில் காய்ப்புழுக்களும், வெண்டையில் தத்துப் பூச்சியும், கத்தரியில் துளைப்பான்களும், கடலை வண்டும் (Epilachna) காணப்பட்டன. வியாதிகளில் கொள்ளை நோய், இலைப்புள்ளிநோய் நெற்பயிரிலும், பருத்தியில் உலர்ந்து போகும் நோயும், தென்னையில் குறும்பையழுகல் நோயும், திராட்சையில் பூசண நோயும் காணப்பட்டன. காணப்பட்ட இடங்களில் தகுந்த தடுப்பு முறைகள் கையாளப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் மழை சராசரிக்குக் கொஞ்சம் அதிகரித்ததால், உருளைக்கிழங்கு, கோதுமை, ஓட்ஸ் இதர காய்கறிகள் முதலியன நன்மை பெற்றன. தோட்டக் காய் உருளைக்கிழங்கு விதைப்புக்கு பூமிகள் தயார் செய்யப்பட்டன. இதற்கு முன்போக உருளைக்கிழங்கில் களை எடுக்கப்பட்டது. சூரை நோய் உருளைக்கிழங்கில் சிறிதளவு கண்டது. ஆனால் சே.பர் வண்டின் புழுக்களால் தான் அதிக சேதம் விளைந்தது. இவற்றுக்கு வேண்டிய தடுப்பு முறைகள் உடனடியாகக் கையாளப் பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இம்மாத முற்பகுதியில் கனத்த மழை இருந்தது. அதனால் மாவள்ளிக்கிழங்கு, வாழை, காய்கறிகள், தென்னை முதலியவற்றில் பூக்கள் தோன்ற ஆரம்பித்தன. போர்டோ மிக்சர், கந்தகம் இவை திராட்சைக்கும், பாலிடால், டி. டி. டி. கந்தகம் இவை மாவுக்கும் வேப்பம் புண்ணாக்குக் கலவை எனு மிச்சைக்கும் தடுப்பு உபகரணமாகத் தெளிக்கப்பட்டது.

இம்மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு.—

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு அங்குலத்தில்.
1	4-12-65	சென்னை	5.67
2	4-12-65	நாகப்பட்டினம்	5·63
3	4-12--65	திருக்குப்பம்	5·95
4	5-12-65	கடலூர்	6.42
5	5-12-65	பாலூர்	5.53
6	6-12 65	ஆடுதுறை	4.48
7	6-12-65	பட்டுக்கோட்டை	4.13
8	7-12 65	திண்டிவனம்	5.50
9	21-12-65	பாம்பன்	4.61

பிராந்திய மழையளவுகள். (அங்குலத்தில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	டிசம்பர் மாதமழையளவு,	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு
1	வட பிராந்தியம்	9.0	+ 5.7	மிக அதிகம்
2	கீழ்க்கரைப் பிராந்தியம்	20.2	+13.8	,,
3	மத்தியப் பிராந்தியம்	4 0	+ 2.0	அதிகம்
4	தென் பிராந்தியம்	8.8	+ 5.4	மிக அதிகம்
5	மலைப் பிராந்தியம்	7.8	+ 1.6	அதிகம்

1965-ம் ஆண்டு டிசம்பர் மாதக் காலநிலை அறிக்கை
மழை அளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர் (1)	இம்மாதத்திய மழையளவு (2)	சராசரியிலிருந்து மாறுபாடு (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழையளவு (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ..	11·9	+ 6·4	48·7
திருக்குப்பம்*	11·0	+ 7 3	45·3
வேலூர்	8·5	+ 5 9	31·0
குடியாத்தம்*	4·6	+ 3·0	24·7
கீழ்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	23·9	+18·7	60·5
திண்டிவனம்*	15·7	+13·4	46·3
கடலூர்	25·5	+18·0	58·9
நாகப்பட்டினம்	19·7	+ 8·8	46·9
ஆடுதுறை*	18·2	+12·2	47·9
பட்டுகோட்டை*	17·9	+11 9	42·2
மத்திய பிராந்தியம்			
சேலம்	2·2	+ 1 1	26·3
சேலம்*	1·8	+ 0 7	30 0
கோயமுத்தூர்	4·8	+ 2·5	21·5
கோயமுத்தூர்*	5·3	+ 3·0	19·8
ஆளியார் நகர்*	3·7	+ 1·4	18 6
திருச்சிராப்பள்ளி	5·9	+ 3 3	33·5
தென் பிராதியம்			
மதுரை	3·9	+ 1·9	28·7
பாம்பன்	17·6	+10·1	41·3
கோவில்பட்டி*	3·4	+ 1 3	25·8
பாளையங்கோட்டை	5·4	+ 1 2	31·4
அம்பாசமுத்திரம்*	10·4	+ 5 7	33 4
நாகர்கோயில்*	10·6	+ 8 8	48·7
கன்னியாகுமரி*	10·2	+ 8 6	33·2
மலை பிராந்தியம்			
கோடைக்கானல்	8·8	+ 3 7	49·2
கூனூர்*	10·7	+ 4 3	50·5
உதகமண்டலம்*	6·7	— 3·9	38·0
நஞ்சநாடு*	4·9	+ 2 4	39·5

குறிப்பு.—*சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்,

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.

திருர்க்குப்பம் விவசாயிகள் தினவிழா

விவசாயிகள் தினவிழாவில் விவசாயிகள் அதிகாரிகளுடன் விவாதிக்கின்றனர்.



விவசாயிகள் தினவிழாவின்போது 'கோடிழுக்கும் கருவி'யினுல் இடப்பட்ட கோடுகளில் நெற் பயிர் வரிசையில் நடப்படுவதை விவசாயிகளுக்கு விளக்கப் படுகின்றது.

விவசாயிகள் தினவிழாவின்போது பயிருக்கு மருந்து தெளிப்பது பற்றி விவசாயிகளுக்கு விளக்கப்படுகின்றது.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966

மலைப்பகுதியில் மண்வளப் பாதுகாப்பு வேலைகள்



பழனிமலையில் காப்பித் தோட்டங்களிடையே ஓடும் நீரோடைகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பு அணைகள் (Check Dams).

பழனிமலையில் வாழை, காப்பி, தோட்டங்களில் செய்யப்பட்டுள்ள மண்வளப் பாதுகாப்பு வேலைகள்.

பழனிமலையில் அமைக்கப்பட்டுள்ள சமதளக் கற்சுவர்கள்.